1135

# ஸன்மா

Vol 1.



OFFICE OF THE
1 DEC 1933
MADRAS

மாதப் பதிப்பு

பத்ரிகாசிரியர் : சாஸ்திர ரத்னம் தேதியூர் ஸுப்பிரமணியசாஸ்திரிகள்.
மதுரை (S. I.)

தனிப்பிரதி விலை அணா 2

Copy Right

கடவுள் துணை.

# ஸன்மார்க்க ப்ரதர்சினீ.

## தமிழ் மாதாந்திரப் பத்திரிகை.

ஸ்ரீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜனனீ ஸர்வமங்களா |
ஜனக: சங்கரோ தேவ: தம் வந்தே குஞ்சராननம் ||


| மாலை 1. | மதுரை 1933-ஞு டிசம்பர்-மீ 1-உ | மணி 4. |
|---|---|---|


பொருளடக்கம்.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீசங்கரவிஜயம். | 115 |
| 2. | ஸ்ரீமத் பகவத் கீதை. | 123 |
| 3. | ராமாயணம். | 139 |
| 4. | சிவோத்கர்ஷம் | 145 |
| 5. | ஸம்ஸார லீலை. | 153 |
| 6. | சிகையின் அவசியம். | 155 |
| 7. | ஜாதிபேதம் | 157 |



ஆசிரியர்:—

சாஸ்திர ரத்னம், ப்ரம்மஸ்ரீ தேதியூர்,

**ஸுப்பிரமணிய சாஸ்திரிகள்,**

மதுரை.

# A. LAKSHMANASWAMY NAIDU,

*Publisher, Rajamundry.*

---

## SARASWATHI TAMIL READERS.

(UP TO 8TH STANDARD.)

BY

G. Damodara Mudaliar, B.A.L.T.,
District Educational Officer &
Pandit L. Olaganadha Pillai,
Lecturer in Tamil Sanskrit College Tiruvadi.

## சரஸ்வதிதமிழ் வாசக புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | 0—2—6 | நான்காம் புத்தகம் | 0—5—0 |
| இரண்டாம் புத்தகம் | 0—3—0 | ஐந்தாம் புத்தகம் | 0—6—0 |
| மூன்றாம் புத்தகம் | 0—4—0 | | |

6, 7, 8-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

## சரஸ்வதி சாஸ்திர வாசகங்கள்.

| | |
|---|---|
| மூன்றாம்புத்தகம் ... | 0—3—0 |
| நான்காம் புத்தகம் ... | 0—4—0 |

5, 6, 7, 8-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

## பாலகீதாஞ்சலி

| | |
|---|---|
| பால கீதாஞ்சலி முதல் புத்தகம் ... | 0—2—0 |
| ,, இரண்டாம் புத்தகம் ... | 0—2—6 |
| ,, மூன்றாம் புத்தகம் ... | 0—3—0 |

4, 5-ம் புத்தகங்கள் அச்சில் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| பாரத கதைகள் | (71 பக்கங்கள்) | 0—6—0 |
| பாரத வீரர்கள் | (99 பக்கங்கள்) | 0—8—0 |

## ENGLISH BOOKS.

| | Rs. A. P. |
|---|---|
| Sarsawathi English Reader First Book | 0—3—0 |
| Elementary Education for Indian boys and girls (Calico bound.) by Dr. V. Varahanarasimham M A., Ph. D. | 2—0—0 |

N.B. இப்புத்தகங்கள் எல்லா புத்தக க்கடைகளிலும் கிடைக்கும்.

**A. இலட்சுமணசுவாமி நாயுடு,**
பப்ளிஷர், ராஜமண்டிரி.

# ஸ்ரீ சங்கர விஜயம்.

## சென்ற மாதத்தொடர்ச்சி.

ஸதாசாரத்தையும் வைதிக மார்க்கத்தையும் இந்தப் புண்ய பூமியில் நிலைநாட்ட ஸாக்ஷாத் மஹா கைலாஸவாஸியான பரமேச்வரனுடைய திருக்குமாரனான ஆறுமுகக் கடவுளாகிய ஸுப்ரமண்ய மூர்த்தியே மனுஷ்ய வடிவாகப் பூமியிலவதரித்து, குமாரிலபட்டர் என்ற பெயரோடு உபநயனம் முதலான வைதிக ஸம்ஸ்காரங்களால் தான் பரிபூர்ணமான ப்ராமண்யத்தையும் அடைந்து, ஸகல வித்யைகளையும் கற்றுணர்ந்து, வைதிக மதத்திற்கு விரோதமான பௌத்தமதம் முதலான துர்மதங்களைக் கண்டிக்க வேண்டுமென்ற ஆவலுடன், அந்த புத்த சாஸ்திரத்தையும் தான் படித்துத் தெரிந்துகொண்டால் தான் அதைஸுலபமாகக்கண்டிக்க ஸாத்யமாகுமென்று நினைத்துப் புத்தமத ஆசாரியனானஸுகதரிடம் புத்த சாஸ்திரத்தைப் படிக்க சிஷ்யபாவத்தோடு குமாரிலபட்டர் சென்றார் என்று முன் ஸஞ்சிகையில் எழுதப்பட்டது.

அவ்விதம் ஸுகதர் என்ற புத்தாசார்யனிடம்சிலவருஷங்களில் புத்த சாஸ்திரங்களுடைய ரஹஸியத்தையும் தான் கற்றுணர்ந்தார். படிக்கும்பொழுது அந்த புத்தாசாரியன் ஈச்வரனை நிராகரித்துப் பேசுவதையும், வேதம் ப்ரமாணமில்லையென்று பேசுவதையும், பரலோகத்தை இல்லையென்று சொல்வதையும், ஜாதிவர்ணபேதம்

இல்லையென்று சொல்வதையும், காதுகொடுத்துக் கேட்கும்படியான தௌர்பாக்யம் நேர்ந்ததே, ஐயோ! இது பெரும் பாபம் என்று நினைத்து இந்தக் குமாரிலபட்டர் கண்ணீர் ஜலத்தைப்பெருக விட்டுக்கொண்டு, தேம்பித்தேம்பி அழுகிற வழக்கமும் உண்டு. அச்சமயங்களில் இந்தக் குமாரிலபட்டரோடு சேர்ந்து படிக்கும் பௌத்த மதத்தை அநுஸரித்த சில பௌத்த மாணவர்களும் இந்தக் குமாரிலபட்டருடைய வருத்தத்தைநோக்கி, 'இந்த மாணவன்நமது மதத்தை யனுஸரித்தவனல்ல; வைதிக மதத்தை யனுஸரித்தவன்; ஈச்வரனில்லையென்று நம்முடைய குரு பாடம் சொல்லும்பொழுது இந்த மாணவன் எவ்வளவு வருத்தத்தை யடைகிறுன், 'என்ற விஷயத்தைத் தனது சிநேகிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு தனது குருவான ஸுகதரிடத்திலும் ரஹஸியமாக'இந்தக்குமாரிலபட்டன் நம்முடைய மதத்தைச் சேர்ந்தவனே இல்லை. நம்முடைய மதத்தின் ஸாரத்தை சௌர்யம் பண்ணுவதற்காகத் திருட்டுத்தனமாகச் சிஷ்யன் போல் வேஷம் போட்டுக்கொண்டு நமதுபாடசாலையில் சேர்ந்துவிட்டான். ஆசாரியனே! இவனால் நமக்கே பிறகு தீங்கு நேரிடும் போல் தோன்றுகிறது' என்றும் சில சந்தர்ப்பங்களில் சொல்லுவதுண்டு.

ஆனால் அதை ஆசாரியன் கவனிக்கிறதில்லை. 'நம்முடைய மதத்திற்கு மேலான மதமேயில்லை. இதைக் கண்டிக்க யாராலும் முடியாது. அஹிம்ஸையைக் கைக்கொண்ட நம் மதத்தில்தான் ஜயலக்ஷ்மி குடியிருந்து வருவாள்' என்ற ஒரு குருட்டுத்தனமான எண்ணம் அந்த ஸுகதருடைய மனதில் உதித்திருந்ததுதான்இந்தக் குமாரிலபட்டரை ஒரு லக்ஷ்யகோடியில் நினைக்காமலிருந்ததற்குக் காரணமாகும். குமாரிலபட்டரும் க்ரமமாக புத்தமதத்தின் ஸாரங்களை முழுமையும் தெரிந்துகொண்டு, 'ஐயோ கஷ்டம்! இது

*வேத பாஹ்யமதம்: †நிரீச்வாமதம்:, 'என்ற எண்ணத்தை உள்ளே வைத்துக்கொண்டு குருவினிடத்தில் விடையும் பெற்றுக்கொண்டு வெளியில் வந்து விட்டார். வெளியில் வந்த பிறகு ஆங்காங்கு தர்ம ப்ரசாரம் செய்வதற்காகச் சென்று பௌத்தமதக் கொள்கைகளைக் கண்டித்து, இந்துமதக்கொள்கைகளையும் வைதிகஸித்தாந்தத்தையும் ஆங்காங்கு நிலைநாட்டி, ஸனாதனதர்ம தேவதை இந்தப் பாரத பூமியில் ஸ்திரமாக வசிக்கும்படி செய்ய முயற்சி செய்தார்.

ஆகிலும் அந்தக் குமாரிலபட்டருடைய நன்முயற்சியானது பயனற்றதாகவே காணப்பட்டு வந்தது. அதற்குக் காரணமோ தேவேந்திரனானவன் மஹா கைலாஸத்திற்கதிபதியான பரமேச்வரனுடைய ஆக்ஞையை முன்னிட்டு, இந்தப் புண்ய பூமியில் வைதிக தர்மத்தை நிலைநாட்டச் சந்திரவம்சத்தில் கார்த்தவீர்யார்ஜுனனுடைய பரம்பரையில் தான் ராஜகுமாரனாக அவதரித்து தனுர்வித்தையில் ரொம்பவும் ஸாமர்த்தியசாலியாக இருந்த காரணத்தால் ஸுதன்வா என்ற பெயரால் ஆங்காங்கு விளங்கி வந்தாலும் காலதோஷத்தாலோ ஸங்கதோஷத்தாலோ பௌத்தாசாரம் மேலிடப்பெற்று பௌத்த மதத்திற் சிறந்த பண்டிதர்களே ராஜாங்கத்தில் ஸமஸ்தான வித்வான்களாக அந்த பௌத்தமத பண்டிதர்களான வித்வான்களுடைய ஸித்தாந்தத்தில் தான் வியாமோஹத்தை யடைந்து, வைதிக மதத்தில் நம்பிக்கையையும் தான் விட்டு, தனது தேசத்தில் பௌத்தாசாரத்தையே நிலைநாட்ட முயற்சி செய்து வந்தது தான் காரணமாகும். வைதிக மதத்திற்கு ஆனுகூல்யத்தைச் செய்ய வந்த அரசனும் பௌத்தர்களின் வசம் அகப்பட்டுக்கொண்டு ப்ராதிகூல்யத்தைச் செய்ய ஆரம்பித்துவிட்டால் அதற்கு விரோதமாக மற்றவர்களின் முயற்சி எப்படிப் பலிக்கும்? இதையே குமாரிலபட்டரும் எண்ணி ராஜாங்கத்தில் தனக்கு ஆனு

* வேதத்தில் தள்ளப்பட்ட மதம்.

† ஈச்வரனில்லையென்று சொல்கிற மதம்.

கூல்யத்தை ஸம்பாதித்துக்கொண்டு, பிறகு பௌத்தமதக்கொள்கைகளைக் கண்டித்து, வைதிகமதக் கொள்கைகளை ஸ்தாபனம் பண்ணினால் தான் நமது அவதாரப்ரயோஜனம் நிலைக்கும் அதில்லாமல் இப்பொழுது வீண் பாடுபடுவதில் ப்ரயோஜனமில்லை என்று தீர்மானித்து, ஸுதன்வா என்ற மஹாராஜாவை பேட்டி கண்டு, தனது ஸித்தாந்தத்தை அரங்கேற்றுவதற்காக மாஹிஷ்மதி என்ற ராஜதானிக்குச் சென்றார்.

அங்குச்சென்று ராஜதர்சனத்திற்கு எவ்விதமான உபாயத்தை அவலம்பிக்கவேண்டுமோ அவ்விதமான உபாயத்தையும் கைப்பிடித்துக்கொண்டு, ஒரு நாள் பகலில் சுமார் நான்கு மணிக்கு மஹாராஜா தர்பாரில் ஸிம்மாசனத்தில், அயர்ந்திருக்கும் காலத்தில் குமாரில பட்டர் சென்று ராஜாவைக்கண்டு கண் குளிர்ந்து ஆனந்தமடைந்தார். அந்த ஸந்தர்ப்பத்தில் மஹாராஜாவின் தர்பாரில் ஆயிரக் கணக்கான பண்டித சிரோமணிகள் அவரவர்களுக்கு உசிதமான ஆஸனத்தில் அமர்ந்திருந்தார்கள். ஆகிலும் அவர்கள் எல்லாரும் பௌத்த மதத்தில்தான் சிறந்த வித்வான்களாக இருந்தார்கள். வைதிக மதத்தில் சிறந்த பண்டிதர்கள் ஒருவர் கூட அங்கில்லை. ராஜனும் பௌத்த மதத்திற்கரிகுறியான வேஷத்தோடு விளங்கி வந்தான். குமாரிலபட்டர் அதைப் பார்க்க ரொம்பவும் வருத்தத்தையடைந்தார். 'இவ்விதமான ஸபையில் நான் ஒரு சிறுவன் யாதொரு ஸகாயமுமில்லாதவனாக இருந்து வருகிறேன். என்ன வார்த்தையை நான் இங்குப் பேசுகிறது'? என்ற ஆலோசனையோடு இருந்து வந்தார். அப்படி ஆலோசித்துக்கொண்டு அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது தெய்வீகமாக தர்பார் ஸபா மண்டபத்திற்கருகிலுள்ள உத்யானவனத்தில் ஒரு ஆச்சரியம் குமாரிலபட்டர் கண்ணில் தென்பட்டது. அதாவது அழகான ஒரு ஒட்டுமாமரத்தில்

ஒரு கோகில பக்ஷியானது அநேக காக்கைகளுடைய கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்து கொண்டிருந்தது. இந்த ஆச்சரியமே குமாரில பட்டருடைய கண்ணிற்குத் தென்பட்டது. அதைப் பார்த்தவுடன் குமாரிலபட்டர் மனோதைரியத்தை அடைந்து தனக்குப் பேசும் சந்தர்ப்பம் வாய்த்தது என்று சந்தோஷமடைந்தார். உடனே ஒரு வார்த்தையும் பேசினார். அந்தக் கோகிலத்தை பார்த்து பேசுவது போல் பாவித்துக்கொண்டு, ஹே கோகிலமே! ரொம்பவும் நீச ஜாதியில் பிறந்தவைகளாயும் அழகற்றவைகளாயும் கடூரமான சப்தத்தோடு கூடினவைகளாயும் உள்ள இந்தக் காக்கைகளோடு நீ சேராமலிருந்தால் உனக்கு ரொம்பவும் மேன்மை ஏற்படும். மிகவும்நன்றாகவுமிருக்கும், என்றதை மாத்திரம் சொல்லிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டார்.

தர்பார் சபையிலமர்ந்திருக்கும் பௌத்தமத வித்வான்கள் இதைக் கவனித்து இந்தக்குமாரிலபட்டன் நம்மைத்தான் இவ்விதம் சொல்லுகிறான். நாம் காக்கைகளென்றும் ராஜா கோகிலமென்றும் அவனுடைய அபிப்ராயம். இவனை நாம்பேசாமல் விடக்கூடாது. வாதம் செய்து அவனை ஜயித்து அவமதித்துத் தான் விடவேண்டும் என்று தீர்மானம் பண்ணி ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு உதடுகளையும் கடித்துக்கொண்டு அடக்கக்கூடாததான கோபாவேசத்தில் சிவந்த முகத்துடன் ஒவ்வொரு வித்வானும் ஒவ்வொரு பிரம்மரக்ஷஸ்கள்போல் விளங்கி வந்தார்கள். ராஜாவுக்கு இந்த இங்கிதம் தெரிந்துவிட்டது. உடனே தனது அக்கிராஸனத்தின் கீழ் மதத்தினுடைய உண்மையைத் தெளிவு செய்வதற்காக ஒரு மஹா ஸபையை ஏற்பாடு செய்தான். அந்த மஹா ஸபையில் வைதிக மதமே மேலானதென்று ஸ்தாபனம் செய்யக் குமாரில பட்டர் ஒரு கக்ஷியாக நின்று வந்தார். பௌத்த மதத்திற் பயிற்சியுள்ள ஆயிரக்கணக்கான பண்டிதர்கள் ஒரே பக்ஷமாக வைதிக மதத்தை தூஷிக்க ப்ரதிவாதிகளாக எதிர் கக்ஷியில் நின்று வந்தார்கள். சுதன்வா என்ற மஹாராஜா ஸபாபதியென்ற நிலைமையில் ஜட்ஜ் ஸ்தானத்தில் இருந்து வந்தான்.

இவ்விதம் அலங்கரிக்கப்பட்ட மஹாஸபையில் முதலாவது தினத்தில் வேதம் ப்ரமாணமா? இல்லையா? என்ற இஷ்யுவின் பேரில் குமாரிலபட்டர் வேதம் ப்ரமாணமென்று உபந்யஸிக்க, பௌத்தர்கள் வேதம் ப்ரமாணமில்லையென்று பிரதிகக்ஷி சொல்ல இவ்விதம் வாதப்பிரதிவாதங்களால் கலகத்தில் வந்து கடைசியில் முடிந்தது. அன்று ஸபை அதோடு முடிவடைந்தது. அதில் குமாரிலபட்டருடைய பிரஸங்கத்தின் ஸாரமோ பின் வருமாறு:— அதாவது, ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களால் அறிந்து கொள்ள முடியாததாயும் ஒரு காலத்திலும் அழியாததாயும் உள்ள பொருள் எதுவோ அதற்குத்தான் தத்வமென்று பெயர். அந்த தத்வத்தை எது ப்ரகாசம் செய்யுமோ அதுதான் ப்ரமாணமான நூலாகும்; அந்த தத்வம் என்றதோ பரம் பொருளாகிய கடவுள் தான்; அந்தக் கடவுளைப் பிரகாசம் பண்ணிவைக்கிற சக்தி வேதம் ஒன்றுக்குத்தான் உண்டு; ஆகையால் வேதம்தான் ப்ரமாண நூலாக ஆகும். மற்றொன்றும் ஆகாது. ஆகையால் வேதம் ப்ரமாணம் தான், என்பது முதல் தினம் செய்த குமாரிலபட்டருடைய ப்ரஸங்கத்தின் ஸாரம்.

பௌத்தர்களுடைய ப்ரஸங்கத்தின் ஸாரமோ பின் வருமாறு:— அதாவது, ப்ரத்யக்ஷம் அநுமானம் இரண்டு தான் ப்ரமாணமாகும் அந்த இரண்டிற்குட்படாத பொருள் எதுவோ அந்தப் பொருள் இல்லவேயில்லை. இந்த ஆத்மாவுக்கு வேறாகக் கடவுள் என்பவன் இருந்தால் ப்ரத்யக்ஷப் பிரமாணத்திற்கோ, அநுமானப் ப்ரமாணத்திற்கோ, என் புலப்படக்கூடாது? ஆகையால் கடவுள் என்பவனே ஒருவனில்லை. அவன் ஒருவனிருந்தாலல்லவா அவனைச் சொல்லுவதினால் வேதத்திற்குப் ப்ராமாண்யம் வரும் ஆகையால் வேதத்திற்கு அர்த்தமே யில்லாததினால் வேதம் ப்ரமாணமேயில்லையென்பது பௌத்தர்களின் பிரசங்கத்தின் ஸாரம். முதல் தினம் இந்த வாதத்தின் விஸ்தாரத்துடன் ஸபை முடிவு பெற்றது என்று முன்பு சொல்லப்பட்டது.

மறுதினமும் வழக்கம்போலொத்த காலத்தில் ஸபை கூடப் பெற்றது. அன்று ஈச்வரன் உண்டா? இல்லையா? என்ற இஷு

வின்பேரில் ஈச்வரன் உண்டு என்ற பக்ஷத்தைக் குமாரிலபட்டரும், ஈச்வரனில்லை என்ற பக்ஷத்தை பௌத்தர்களும் அவலம்பித்துக்கொண்டு ரொம்பவும் விஸ்தாரமாக வாதம் நடைபெற்றது. அன்றும் கலகத்தோடே *பர்யவஸானம் ஏற்பட்டு ஸபை முடிவு பெற்றது. அன்று குமாரிலபட்டருடைய ப்ரஸங்கத்தின் ஸாராம்சமோ பின் வருமாறு:—அதாவது:—உலகமென்பது ஒரு காரிய வஸ்துவிற் சேர்ந்தது. ஒரு கர்த்தா இல்லாமல் ஒரு கார்யம் உண்டாகாது. அதனால் உலகத்திற்கும் கர்த்தாவாக ஒரு புருஷனை ஒப்புக்கொள்ளவேண்டும். அல்பக்ஞனும் அல்பசக்தியுள்ளவனுயுமிருக்கிற ஜீவனை இவ்வளவு பெரிய உலகத்திற்குக் கர்த்தாவாக ஒப்புக்கொள்ளுவது ஒருவிதமான யுக்திக்கும் பொருத்தமாக ஆகாது. ஜீவனுக்கு விலக்ஷணமான ஒரு பரம புருஷனையே உலகத்திற்குக் கர்த்தாவாக ஒப்புக்கொள்ளவேண்டும். அவன் தான் ஈச்வரனாகுவான். ஆகையால் ஈச்வரன் உண்டு என்றதுதான் இரண்டாவது தினத்தில் குமாரிலபட்டர் செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம்.

பௌத்தர்களுடைய வாதத்தின் ஸாரமோ பின் வருமாறு:—அதாவது:—உலகம் என்ற வஸ்து கார்யமானால் அதற்குக் கர்த்தா ஒருவன் வேண்டுமென்று குமாரிலபட்டர் ஈச்வரனை ஸாதிக்கலாம். ஸ்வபாவத்திலேயே உலகம் என்பது எப்பொழுதும் நித்யமாக இருந்து வருகிறது. அது கார்யமன்று. அக்னிக்கு உஷ்ணம் ஸ்வபாவமல்லவா! அதற்கு ஒருவன் கர்த்தாவாக வேண்டுமா, அதுபோல் ஸுகதுக்கமோஹரூபமான இந்த உலகமானது ஸ்வபாவத்திலேயே நித்யமாக எப்பொழுதும் இருந்தே வருகிறது. இதற்குக் கர்த்தாவாக ஒரு புருஷனையும் ஒப்புக்கொள்ளவேண்டாம். ஆகையால் ஈச்வரனேயில்லை என்பது இரண்டாவது தினத்தில் பௌத்தர்கள் செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம். அன்றும் அதோடு கலகத்தில் பர்யவஸானம் ஆகி முடிவு பெற்றது.

மூன்றாவது தினமும் காலத்தில் வழக்கம்போல் ஸபை கூடப்பெற்றது. அன்று இந்த ஜகத்து நித்யமா? அநித்யமா? என்ற இஷ்டியின் பேரில் ஜகத்து அநித்யமென்ற பக்ஷத்தைக் குமாரில

*பர்யவஸானம்—முடிவு

பட்டரும், ஜகத்து நித்யமென்ற பக்ஷத்தை பௌத்தர்களும் அவலம்பித்துக்கொண்டு விஸ்தாரமாக வாதித்தார்கள். அன்று குமாரில பட்டர் செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சம் பின் வருமாறு:—அதாவது:-எது உண்டாகிறதோ அது அநித்யமாகும் என்ற நியாயத்தை அவலம்பித்து ஜகத்திற்கும் உத்பத்தியை அவச்யம் ஒப்புக்கொள்ள வேண்டுமானதினால் அழிவும் ஜகத்திற்கு அவச்யம் எற்படுகிறது. ஆகையால் ஜகத்து அநித்யம் தான் என்று குமாரிலபட்டர் செய்த ப்ரஸங்கத்தின் ஸாரம். பௌத்தர்களின் ப்ரஸங்கத்தின் ஸாராம்சமோ பின் வருமாறு:—அதாவது:—ஜகத்திற்கு உத்பத்தியே இல்லை. உத்பத்தி எற்பட்டாலல்லவா ஸாதிக்க முடியும். அதைக்கொண்டு ஜகத்தை அநித்யமென்றும் தீர்மானிக்கலாம். உத்பத்தியே இல்லை. உத்பத்தி உள்ள வஸ்துவுக்கும் அழிவு எற்படவேண்டுமென்ற நியமமுமில்லை. ப்ரத்வம்ஸாபாவம் என்று ஒரு அபாவமானது தார்க்கிகர்களுடைய மதத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதாவது, அதற்கு ஒரு பதார்த்தினுடைய அழிவு என்று பெயர். ஒரு குடமானது உடைக்கப்படுகிறது. அந்த உடைதலைத்தான் ப்ரத்வம்ஸாபாவம் என்று சொல்லுகிறது. அந்த அழிவு நித்யம் தானே, அந்த அழிவுக்கு அழிவு உண்டா? அழிவுக்கோ உத்பத்தி உண்டென்பது அநுபவஸித்தம். அழிவுக்கு அழிவு கிடையாதென்பதும் அநுபவஸித்தம். அதுபோல் உலகத்திற்கு உத்பத்தியை ஒப்புக்கொண்டாலும் அழிவு எற்படவேண்டுமென்ற நியமமுமில்லை. உலகம் நித்யம் தான், என்று பௌத்தர்களுடைய ப்ரஸங்கத்தின் ஸாரம். அன்றும் அந்தக் கலகத்தாலேயே ஸபை முடிவு பெற்றது.

மறுநாளும் வழக்கம்போல் உள்ள காலத்தில் ஸபை கூடப் பெற்றது. அன்று ஜன்மாந்தரம் உண்டா? இல்லையா? என்ற இஷயத்தின்பேரில் ஜன்மாந்தரம் உண்டென்ற பக்ஷத்தைக்குமாரில பட்டரும், ஜன்மாந்தரமில்லையென்ற பக்ஷத்தை பௌத்தர்களும் அவலம்பித்துக்கொண்டு வாதம் நடைபெற்றது.

(தொடரும்)

# பகவத்கீதை 2-வது அத்யாயம்.

சென்றமாதத்தொடர்ச்சி.

முதல் அத்யாயத்தில் பிறப்பு இறப்பு என்பதான ஸம்ஸாரம் என்ற கடூரமான வியாதியின் மூல காரணமான சோகமும், மோஹமும், அர்ஜுனனுடைய விருத்தாந்த மூலமாக விவரிக்கப்பட்டது. இந்த இரண்டாவது அத்யாயத்திலோ அந்த சோக மோஹத்திற்கும் மூலகாரணமான மூலாக்ஞானமென்ற மாயையை நசிக்கச்செய்வதில் வல்லமையுள்ள ஆத்மஞான யோகமானது உபதேசிக்கப்படும். அதிலும் முன் அத்யாயத்தில் கடைசிபாகத்தில் அர்ஜுனனானவன் தனது வில்லையும் பாணத்தையும் கீழே வைத்துவிட்டு, ரொம்பவும் சோகத்தால் பீடிக்கப்பட்ட மனதோடு கூடினவனாய்க்கொண்டு, ரதத்தில் தான் உட்கார்ந்து கொண்டான். அத்துடன் போர் செய்வதில் மனமில்லாதவனாகவும் ஆனான் என்றும் சொல்லப்பட்டது. இதை ஸஞ்ஜயன் மூலமாகக்கேட்ட த்ருதராஷ்டிரனுக்கு பகவானான ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனுடைய மதத்தையே சம்மதித்திருப்பார், ஆகையால் யுத்தமும் நடந்திருக்க நியாயமில்லை. தன் பிள்ளைகளுடைய ஸேனையைப் பார்த்தமாத்திரத்தில் பயத்தால் அர்ஜுனன் போர் செய்வதிலிருந்தும் ஒழிவை அடைந்துவிட்டான் என்று தோன்றக்கூடும். அந்தத் தோற்றத்தைத் த்ருதராஷ்டிரனுக்குப் போக்கடிப்பது நமது கடமையென்று நினைத்த

ஸஞ்ஜயனுனவன், "ஹே ராஜனே! நீ வெளியில் பொட்டையாயிருப்பதுபோல் உள்ளேயும் பொட்டையாக ஆகவேண்டாம். விவேகத்தை இழந்து கொள்ளாதே. அர்ஜுனன் போர் செய்வதிலிருந்தும் ஒழிவடைந்து விட்டான் என்று, நான் சொன்னதினுல் பயத்தால் ஒழிவடைந்தான் என்ற எண்ணம் உன் மனதில் உதிக்கவேண்டாம். அர்ஜுனனுடைய மதத்தைப் பகவானும் அனுஸரித்தாரோ என்று நினைக்காதே. யுத்தமும் நடக்காமல் நின்றுவிட்டதோ என்ற எண்ணமும் வேண்டாம்." என்று நாம் உபதேசித்து த்ருதராஷ்டிரனுடைய மௌட்யத்தை விலக்கவேண்டியது அவச்யமானதினுல் ஆத்மஞானயோக உபதேசத்திற்கு முன்பாகப் போர் நடந்த இடத்தில் நடந்த கதா ஸந்தர்ப்பத்தின் ஸாரத்தையும் சுருக்கமாக எடுத்துச் சொல்லவேண்டுமென்று நினைத்து ஸஞ்ஜயன் த்ருதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்கிறுன்.

அதாவது:-யுத்தகளத்தில் போர் செய்யும் உத்ஸாஹத்தோடு அர்ஜுனன் ப்ரவேசித்தாலும், துரியோதனனுடைய கக்ஷியில் நிற்கும் மஹனீயர்களான பீஷ்மர் த்ரோணர் முதலான பெரியோர்களைப் பார்த்தமாத்திரத்தில் ஐயோ! இவர்களைக் கொன்று ராஜ்யம் நமக்கு எதற்காக என்ற கருணை அபாரமாக ஏற்பட்டு விட்டது. அத்துடன் இவ்விதமான மகாபாபத்தைச்செய்ய துணிந்தோமே, என்று நினைக்க நினைக்க அர்ஜுனனுடைய இரண்டு கண்களிலும் கண்ணீர் ஒரு பெரிய ப்ரவாஹம்போல் பெருகிவிட்டது. மனதின் தாபத்தையும் இவ்வளவு தான் என்று சொல்லி முடியாது. அவ்விதம் ஒரு பெரிய சோக சமுத்திரத்தில் அர்ஜுனன் மூழ்கினவனுகி விட்டான். இந்தக் காரணத்தால்தான், தான் கையிலுள்ள வில்லையும் பாணத்தையும் கீழே எறிந்துவிட்டு நான் யுத்தம் செய்ய மாட்டேனென்றும் சொல்லிப் பேசாமல் உட்கார்ந்து விட்டான்

போர் செய்வதினின்றும் அர்ஜுனன் ஒழிவை அடைவதற்கு அவன் செய்த ஸங்கல்பத்தில் துரியோதனனுடைய கக்ஷியிலுள்ள பெரியோர்களிடத்தில் அந்த அர்ஜுனனுக்கு ஏற்பட்ட அளவற்ற ஒரு பெரிய கருணைதான் காரணமாகும். அதுவன்றிப் பயமென்று சொல்ல ஒருவருக்கும் மனம் துணியாது. இவ்வித நிலைமையிலும் பகவானுக்கு அர்ஜுனனை மறுபடியும் யுத்தத்தில் ப்ரவேசிக்கச் செய்யவேண்டும் என்பது தான் அபிப்ராயம். அதை யனுஸரித்துத்தான் சோகத்தால் பீடிக்கப்பட்ட அர்ஜுனனை பகவான் ஸமாதானம் செய்கிறார்.

அதாவது, அர்ஜுனா! அகாரணமாக உனக்கு இவ்விதம் ஏன் மோஹம் ஏற்படவேண்டும்? இந்த வியாமோஹமானது உன்னைப் போலொத்த எல்லாம் தெரிந்தவர்களுக்கு அழகா? சாஸ்த்ர வாஸனையே இல்லாத கேவலமான ப்ராக்ருத ஜனங்களுக்குத் தான் இவ்வித வியாமோஹம் ஏற்படும். இந்தவியாமோஹமானது பரலோகத்திலும் ஹாநியைச் செய்யும். இஹலோகத்திலும் தனது கீர்த்தியைக் கெடுத்துவிடும். இவ்விதமான வியாமோஹத்தை நீ அடையவேண்டாம். உனக்கு இது அழகல்ல. மனதினுடைய உத்ஸாஹத்தைக் குறைக்கும் மிக அல்பமான இந்த வியாமோஹத்தை உடனே விட்டுவிட்டு, யுத்தம் செய்ய உத்ஸாஹமுள்ளவனாக நீ ஆகவேண்டும் என்று பகவான் அர்ஜுனனை ஸமாதானப்படுத்தினார். இவ்விதம் ஸர்வேச்வரனான பகவான் ஸமாதானப்படுத்தியும் துரியோதனனுடைய சக்ஷியில் நிற்கும் வீரர்களைத் தனது பந்துக்கள் என்று அநாதிகாலமாகப் பாராட்டி வந்த அபிமானமாகிய ஒரு பிரம்ம ரக்ஷஸ்ஸானது பகவானுடைய உபதேசத்தையும் அநாதரிக்கும்படி செய்து மறுபடியும் நான் யுத்தம் செய்யமாட்டேன் என்று அர்ஜுனனைப் பிடிவாதம் செய்யும்படியே செய்தது.

அந்த ஸமயம் அர்ஜுனன் பகவானைப்பார்த்துச் சொன்னதாவது: "ஹே கிருஷ்ண! துரியோதனனுடைய கக்ஷியிலிருக்கும் பீஷ்மரும் த்ரோணரும் எனக்கு பூஜ்யாளல்லவா? புஷ்பங்களைக்கொண்டு பூஜிக்கத்தகுந்த மஹான்களைப் பாணங்களால் யுத்தம்பண்ண எப்படி என் மனது துணியும்? லோக குருக்களாயும் மஹான்களாயும் உள்ள பெரியோர்களைக் கொன்று, ராஜ்யத்தை அடைவதைக்காட்டிலும் அவர்களைக் கொல்லாமல் பிச்சையெடுத்து ஜீவனம் செய்வதே நலமென்று நான் நினைக்கிறேன். தவிரவும், அந்தப் பெரியோர்களையே கொன்று யுத்தம் செய்தாலும் நாம் தான் ஜயிப்போமோ? நம்மைத்தான் அவர்கள் ஜயிப்பார்களோ? அது எனக்கு இன்னது என்று விளங்கவில்லை. பீஷ்மர் த்ரோணர் மாத்திரமல்ல. துரியோதனன் முதலானவர்களும் எனக்கு அந்தரங்கமான பந்துக்களல்லவா? அப்பேர்ப்பட்ட பந்துக்களில்லாமல் நான் ஒரு நிமிஷங்கூட ஜீவிக்கமாட்டேன். அவர்களோ எதிரில் சத்ருக்களாக வந்து நிற்கிறார்கள். அவர்களைத்தான் நான் எப்படிக் கொல்கிறது? கிருஷ்ணா! எனக்கு ஒன்றும் தெரியவில்லை. பெரியோர்களைக் கொன்று நாம் எப்படி ஜீவிக்கிறது என்ற தைரியம் தான் மேலிட்டு என்னை ஹிம்ஸிக்கிறது. யுத்தம் செய்வது தர்மமா? செய்யாமற் போவது தர்மமா? என்றும் தெரியவில்லை."

இந்தச் சமயத்தில் உன்னைப்போல் எனக்கு அந்தரங்கமான பந்துவும் ஆசாரியனும் வேறொருவரும் ஆகமாட்டார்கள். ஆகையால் இந்த ஸமயத்தில் நான் உனது சிஷ்யனாக உனது பாதத்தில் விழுந்து கேட்கிறேன். எது எனக்கு ச்ரேயஸ்ஸை கொடுக்கக் கூடியது? யுத்தம் செய்வதா? செய்யாமலிருப்பதா? அதை நிச்சயம் செய்து எனக்கு உபதேசித்து என்னை ரக்ஷிக்கவேண்டும். உன்னைத் தவிர இந்த துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவன் பதினாலு

லோகத்திலுமில்லை என்று நிச்சயமாகச் சொல்லுவேன். த்ருலோக ராஜ்யத்திற்கு ஆதிபத்யத்தை அடைந்தாலுங்கூட இந்த துக்கம் எனக்குப் போகாது. நீதான் சரணம். வேறு கதியில்லை. நான் என்ன செய்வது என்பதைத் தீர்மானித்து எனக்கு அதை உபதேசித்து இந்த சோகஸாகரத்தினின்றும் என்னைக் கரையேற்றிவிட்டு ரக்ஷிக்கவேண்டுமென்றும், ஆனால் யுத்தம் செய்வது எனக்கு இஷ்டமில்லையென்று தன் மதத்தையும் ப்ரகாசம் செய்துவிட்டு அர்ஜுனன் பேசாமலே இருந்துவிட்டான்.

பகவானும் அர்ஜுனனுடைய இந்த துரவஸ்தையைப் பார்த்து மந்தஹாஸம் செய்துகொண்டு இரண்டு ஸேனைகளுக்கும் நடுவில் இவ்விதம் கஷ்டப்பட்டுக்கொண்டு வரும் அர்ஜுனனை நாம் இனி உபேக்ஷிக்கிறது நியாயமாகாது; கௌரவர்களைக் கொன்று ஹஸ்தினபுர ராஜ்யஸ்ரீயை அர்ஜுனனுக்கு அபிஷேகம் செய்வதில் நாம் சஹாயம் செய்வது பின்பு ஆகட்டும். இப்பொழுது உட்பகைகளான சோகமோஹாதிகளை நாசம் செய்து, நித்யமாயும் நிகாற்றதாயும், அனுபவிக்க அனுபவிக்கப் புதிது புதிதாகத் தோன்றுகிறதாயுமுள்ள பரமாநந்தத்தை, நோயற்ற வாழ்வோடு சிரஞ்சீவியாக அனுபவிக்கிறதற்கு ஸ்தானமான "முக்திஸ்ரீநகரீ" யென்ற ராஜ்யத்தில் அத்வைதாத்ம தத்வஞான உபதேச மூலமாக அர்ஜுனனுக்கு அபிஷேகம் செய்துவைப்பதில் இப்பொழுது சஹாயம் செய்யவேண்டும் என்று நினைத்து, அர்ஜுனனுக்கு அத்வைதாத்ம தத்வஞானோபதேசம் பண்ணுவதற்காக ஆரம்பிக்கிறார். ஸகல உபநிஷத்துக்களிலும் எந்த ஆத்மஞானமானது மோக்ஷ ஸாதனமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த ஆத்மஞானமே அர்ஜுனனை நிமித்தமாக வைத்துக்கொண்டு பகவானால் ஸகலமான ப்ராணிகளுக்கும் உபதேசிக்கப்படுகிறது.

மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தை அடையவேண்டு மென்ற ஆவலுள்ளவர்கள் அந்த ஞானோபதேசத்தில் அதிகாரியாக ஆவார்கள். அந்த மோக்ஷத்திலுள்ள ஆசையும், மந்தம், மத்யமம் தீவ்ரம், தீவ்ரதரம் என்ற நான்கு வகையாகப் பிரிக்கப்படும். நான் மோக்ஷ ஸாதனமான ஞானத்தை அடையவேண்டுமென்ற எண்ணத்துடனிருந்து வருகிறேன். ஆனால் அதற்குத் தகுந்த குருக்கள் அகப்படவில்லையென்று

அத்வைதாத் மதத்வ ஞானோபதேசம்.

சொல்லிக்கொண்டே தனது ஜீவதசையைக் கழிக்கிற மஹான்கள் சிலர்கள் உண்டு. அவர்களுடைய ஆசையை மந்தம் என்பதற்கு உதாரணமாக வைத்துக்கொள்ளலாம். சிலர்கள் ஆசையோடு மாத்திரமில்லாமல் தனது குடும்ப பாணத்தைப் ப்ரதானமான கார்யமாக வைத்துக்கொண்டு அதற்கு விரோதமில்லாத காலத்தில் எங்கேயாவது வேதாந்த விசாரம் நடக்குமானால் அங்குச்சென்று இரண்டொரு வாக்யங்களைக் காதில் கேட்கிறார்கள். அவர்களுடைய ஆசையை மத்யமம் என்பதற்கு உதாரணமாக வைத்துக்கொள்ளலாம். சிலர்கள் மஹா குருக்களிடம் சென்று வேதாந்த விசாரத்தையே ப்ரதானமாக வைத்துக்கொண்டு குடும்ப பரணத்தை அப்ரதானமாக பாவித்து வருகிறார்கள். அவர்களுக்கு மோக்ஷத்திலுள்ள ஆசையை தீவ்ரம் என்பதற்கு உதாரணமாக வைத்துக்கொள்ளலாம். சிலர்கள் ப்ரதானமாகவோ அப்ரதானமாகவோ குடும்ப பரணமென்பதே இல்லாமல் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு அதாவது ஸந்யாஸம் செய்துகொண்டு ஸத்குருக்களையே சரணமாக அடைந்து எப்பொழுதும் வேதாந்த தத்வங்களையே விசாரித்து வருகிறார்கள். இவர்களுக்கு மோக்ஷத்திலுள்ள ஆவலை தீவ்ரதரம் என்பதற்கு உதாரணமாக வைத்துக்கொள்ளலாம்.

அந்த தீவ்ரதரமான மோக்ஷத்தில் ஆசை எந்தப்ராணிகளுக்கு இருக்கிறதோ அந்த ப்ராணிகள் எந்த ஜாதியானுலும், எந்த ஆச்ரமமானுலும், அவர்கள் ப்ரகிருதத்தில் பகவானுல் உபதேசிக்கப்படும் அத்வைதாத்ம ஞானோபதேசத்தில் முக்கியாதிகாரிகளாக ஆவார்களென்பது திண்ணம். அர்ஜுனனையோ முக்யாதிகாரிக்கும் மேலான அதிகாரியாகச் சொல்லவேண்டும். அர்ஜுனனுக்கு பகவான் தானுகவே ஞானோபதேசம் செய்ததாகத்தான் தெரிகிறது. அர்ஜுனன் பகவானிடத்தில் ஞானயோகத்தைத் தான் அடையவிரும்பினதாகத் தெரியவில்லையே. அப்படியிருக்கும்பொழுது அர்ஜுனனை ஞானயோகத்திற்கு உத்தமமான அதிகாரியென்று எப்படிச்சொல்லக்கூடும்? என்று சிலர்களுக்கு ஸந்தேகம் ஜனிக்கலாம். அது சரியே. ஆகிலும், அர்ஜுனனை யோகப்ரஷ்டன் என்று சொல்லவேண்டும். மோக்ஷத்திற்கு அந்தரங்க ஸாதனமான ஞானயோகத்தில் எழுவிதமான பிரிவுகள் உபநிஷத்துக்களில் கூறப்பட்டிருக்கின்றன. அந்தப் பிரிவுகளைத்தான் வித்வான்கள் ஞான பூமி என்று சொல்லுவார்கள். அவைகளில் ஒன்று "சுப இச்சை" இரண்டு "விசாரணை" மூன்று "தநுமானஸீ" நான்கு "ஸத்வாபத்தி" ஐந்து "அஸம்ஸக்தி" ஆறு "அபாவனை", எழு "துரீயம்" என்று சொல்லப்படும்.

அவற்றில் "சுப இச்சை" என்பது முதலாவதான பூமியாகும். சென்ற அநேக புண்ய ஜன்மாக்களில் சாஸ்திரத்திற் கூறிய ஸத்கர்மாக்களைப் பலாபிமானமில்லாமலும் அஹங்காரமில்லாமலும் செய்து அதனுல் பரமேச்வரனை ஸந்தோஷிக்கவும் செய்து அதன் மூலம் பரிசுத்தமான மனதோடு கூடின புண்ய ஜனங்களுக்கு ஸாதன சதுஷ்டயமும் ஸுலபமாக ஸித்திக்கிறது. விவேகம், வைராக்யம், சமாதிஸம்பத்தி, முமுக்ஷுத்வம் என்ற நான்கு ஸாதனங்களும் அந்தப் புண்ய ஜனங்களிடம் குடியிருந்து வரும். பரம்பொருள்

என்ற ப்ரம்மம் ஒன்றுதான் நித்யமான வஸ்து, மற்ற உலகங்களெல்லாம் அநித்யமான பொருள், என்ற த்ருடமான நிச்சயமே விவேகமாகும். அந்த விவேகத்தின் பலத்தால் இந்த லோகத்திலுள்ள ஸ்திரீ முதலான விஷயாதிகளிலோ, ஸ்வர்க்கம் முதலான பாலோகத்திலுள்ள தேவஸ்திரீ முதலான விஷயாதிகளிலோ, த்ருடமான வைராக்யம். அதாவது மூத்ரபுரீஷங்களில் வெறுப்பு எற்படுவது போல் அவற்றிலும் வெறுப்பு எற்படுவது என்பதே வைராக்யமாகும். விவேகத்நால் ஏற்படக்கூடிய வைராக்யம் தான் ஸாதனசதுஷ்டயத்திற் சேர்ந்த வைராக்யமாக ஆகும்.

சமாதிஸம்பத்தியும் சமம், தமம், திதிக்ஷை, உபாதி, ச்ரத்தை, ஸமாதானம் என்ற ஆறு குணங்களடங்கியது. மனதை விஷயாதிகளிற் போக்காமல் தனக்கு ஸ்வாதீனமாக வைத்துக்கொண்டு மோக்ஷ மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும்படி அந்த மனதிற்கு உத்ஸாஹத்தை மூட்டுவதே சமமாகும். அது போலவே வெளியிலுள்ள நேத்திரம் முதலான இந்திரியங்களுக்கும் பகவானுடைய பரிசர்யையாகிய கைங்கர்யத்திலேயே ப்ரசாரத்தை உண்டு பண்ணுவது தமமாகும். அவ்விதமே தன்னை ஒருவர் நிந்தித்தாலும் தடியினால் அடித்தாலும் அதற்கு யாதொரு விதமான பதிலும் செய்யாமல் நாம் செய்த கர்மபலம் இது என்று நினைத்து, எவ்விதமான துக்கம் வந்தாலும் ஸஹித்துக்கொண்டிருக்கும் சக்தியே, திதிக்ஷை என்று சொல்லப்படும். அப்படியே வைதிகமோ, லௌகிகமோ எந்த கர்மாவானாலும் ஸரி, அவைகளில் விரிவை க்ரமமாகக் குறைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கர்மாக்களில் நின்றும் ஒழிவை யடைவதே உபாதியாகும். சாஸ்த்ரத்திலும் சாஸ்த்ரத்தைக் கற்றுணர்ந்த மஹான்களுடைய வாக்கிலும் சலனமில்லாத நம்பிக்கையே ச்ரத்தையாகும். பரமேச்வரனுடைய பாத கமலத்தில் தனது

மனதை அர்ப்பணம் செய்து ஒவ்வொரு தினத்திலும் கொஞ்ச காலமாவது வேறு விஷயாதிகளுடைய நினைவு இல்லாமல் அந்தப் பரமேச்வரனுடைய சரண கமலத்திலேயே ஸ்திரமாக நிற்கும்படி தனது மனதை அப்யாஸம் செய்துகொண்டு வருவதே ஸமாதி யாகும். இவ்விதம் சமம் முதல் ஸமாதி முடிய உள்ள ஆறு குணங்க ளடங்கிய ஒரு ஸமூஹத்தை "சமாதி ஸம்பத்தி" என்று வித்வான்கள் சொல்லுவார்கள். இது நான்கு ஸாதனங்களுள் மூன்றாவது ஸாதன மாக ஆகும். முமுக்ஷுத்வம் என்ற நான்காவது ஸாதனம் ஜன்ம மரணமாகிய ஸம்ஸாரம் என்ற பெரும் வியாதியிலிருந்து நாம் விடுபட்டுப் பரம்பொருளுடைய ஸமீபம் சென்று அவனாகவே நாமாகி, நாமாக அவனையும் பண்ணி, இரண்டையும் ஒரு அகண்டமா கச்செய்து, நிகரற்ற போாநந்த ஸாகரத்தில் மூழ்கிக்கொண்டிருக்கக் கூடிய மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தையே அடைவதில் த்ருடமான இச்சையோடு கூடிக்கொண்டிருக்கும் தன்மையே முமுக்ஷுத்வம் என்று சொல்லப்படும்.

இவ்விதம் விவேகம், வைராக்யம், சமாதிஸம்பத்தி, முமுக்ஷுத் வம், என்ற நான்கு விதமான ஸாதன ஸமூஹங்களை ஞான பூமியில் முதல் பூமியாகச் சொல்லுவார்கள். இந்தப் பூமியிலுள்ள அதிகாரி களுக்குப் பரமமங்களமாயும், பரமாநந்தரூபமாயும், துக்க ஸம்பந்த மில்லாததாயும் உள்ள ப்ரம்மத்தினுடைய ஸ்வரூபஸாயுஜ்யத்தை அடையவேண்டுமென்ற இச்சையைத்தவிர வேறு அசுபமான அநாத்ம வஸ்துக்களில் இச்சை ஏற்பட நியாயமில்லாததினால், இந்த ஸாதனசதுஷ்டயமென்ற முதலாவதானஞான பூமிக்கு "சுபஇச்சை" என்ற பெயர் வழங்கி வருகிறது. இதற்கு அடுத்த பூமியோ, "விசாரணை" என்று சொல்லப்படும். முன்சொன்ன ஸாதனசதுஷ்ட யத்தையும் அடைந்த உத்தமாதிகாரியின் புருஷன் ப்ரம்மதத்வத்தை

உபதேசம் பண்ணக்கூடிய ஸத்குருவையடைந்து, ஸேவை, விநயம் நமஸ்காரம், பூஜை முதலான தன்னுடைய தர்மங்களால் அந்த ஸத் ப்ரீதியையும் ஸம்பாதித்துக்கொண்டு, அந்த ஸத்குருவின் ஸமீபத்தி லேயே எப்பொழுதும் வஸித்துக்கொண்டு, அந்த மஹா குருக்களு டைய ஸம்பத்தையே எதிர்பார்த்துக்கொண்டு, அவர்களால் உப தேசிக்கப்படும் தத்வத்தை ச்ரத்தாபக்தியோடு ச்ரவணம் செய் வதும், பிறகு ச்ரவணம் செய்யப்பட்ட சாஸ்த்ரத்தின் தத்வத்தை சாஸ்த்ர விரோதமில்லாத யுக்திகளால் சிந்தித்துத் தன் மனதை விட்டு போகாமலிருக்கும்படி செய்துகொள்ளுவதுமே "விசாரணை யென்று சொல்லப்படும். அதாவது ச்ரவணமும் மனனமும் இரண் டாவது பூமியாகும். அந்த இரண்டாவது பூமியில் சாஸ்த்ரத்தின் உண்மையை விசாரிக்கும் அவஸரமானதினால், அந்த பூமிக்கே விசாரணையென்று பெயர் ஏற்பட்டது.

மூன்றாவது பூமியோ "தனுமானஸீ" என்று சொல்லப்படும். அதாவது, குருவினால் உபதேசிக்கப்பட்ட ப்ரம்ம தத்வத்தை இடை விடாமல் த்யானம் செய்து, அந்தத்யான யோகத்தின் பலத்தால் அந்த ப்ரம்ம தத்வமானது தனது அனுபவத்திற்கு ப்ரத்யக்ஷமாகப் புலப்படும் விஷயத்தை செய்கிற அப்யாஸமும், மூன்றாவது பூமியா கும். அந்த ப்ரம்மத்தைத் த்யானம் பண்ணின கௌரவத்தால் மனதிற்கு மற்ற ஸ்திரீ முதலான விஷயங்களைக்கேட்கும் பொழு தோ, பார்க்கும் பொழுதோ, ஒருவெறுப்பு ஏற்பட்டுத்தான் ரொம்ப வும் குறுகிப்போகிறபடியால், அதை யனுஸரித்தோ அல்லது அகண்டமான ப்ரம்மத்தின் ஆகாரமாகப் பரிணமிக்கிற சக்தி மன திற்கு ஏற்பட்டுவிட்டபடியால், த்யான காலத்தில் மனது ரொம்பவும் விசாலமாக இருக்கும் என்பதை உத்தேசித்தோ அந்த பூமிக்குத் "தனுமானஸீ" என்று பெயர் ஏற்பட்டது. தனுஎன்ற சப்தத்திற்கு

விஸ்தாரம் என்றும் அர்த்தம் உண்டு. சுருங்குதல் என்றும் அர்த்தம் உண்டு. ப்ரபஞ்ச வாழ்க்கையில் மனதிற்கு சுருக்கத்தையும் அத்வைத ப்ரம்மத்தினிடத்தில் மனதிற்கு விஸ்தாரத்தையும் அந்த பூமி கொடுக்கிறபடியால், அந்தமூன்ருவது பூமிக்கு "தனுமானஸீ" என்ற பெயர் பொருத்தமாக உள்ளதே.

நாலாவது பூமியை "ஸத்வாபத்தி" என்று சொல்லுவார்கள். ஸத்வம் என்ருல் பரம்பொருளே. அந்தப் பரம்பொருளை நாலாவது பூமியிலுள்ள உத்தமாதிகாரி ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிருன். அவனுக்கு அதனுல் "ப்ரம்மவித்" என்ற பெயரும் சாஸ்த்ரங்களாற் சொல்லப்படுகிறது. அந்த ஸமயத்தில் அந்த ப்ரம்மவித்திற்கு உலகங்களெல்லாம் ஸ்வப்னமாகவே ஆகிவிடுகிறது. ஸ்வப்னத்தில் காணப்படுகிற பதார்த்தங்களை நாம் எவ்விதம் மதிப்போமோ, அது போல் தான் இந்த ஜாகரத்தில் காணப்படும் பதார்த்தங்களை இந்த ப்ரம்மவித்தானவன் மதிக்கிருன். அதாவது, தனக்கு லக்ஷ்யமான ப்ரம்மதத்வம் ஒன்றைத்தவிர மற்ற வஸ்துக்கள் ஒன்றையும் அவன் ஸத்யமாகப் பாவிக்கிறதேயில்லை. உண்மையான பொருளின் லாபம் இந்த நாலாவது பூமியில் ஏற்படுகிறபடியால் அந்த நாலாவது பூமிக்கு "ஸத்வாபத்தி" என்ற பெயர் பொருத்தமானதே.

ஐந்தாவது "அஸம்ஸக்தி"யாகும். நாலாவது பூமியில் தனக்கு ப்ரத்யக்ஷமாகப் புலப்பட்ட பரம்பொருளாகிய பரப்ரம்மத்தினிடத்தில் தான் லயப்பட்டவனுக ஆகித் தனக்குச் சொந்தவீடான ப்ரம்மத்தினுடைய ஸ்வரூபஸாயுஜ்யத்தையே அடைந்திருக்கும் காரணத்தால் உலகத்திலுள்ள எந்தப் பொருளும் அந்த மஹானுபாவனுக்குப் புலப்படுகிறதில்லை. ப்ரம்மத்தைத் தவிர வேருன ஜகத்தெல்லாம் அவனுடைய விஷயத்தில் மறைந்துவிடுகிறது. ப்ரம்மத்தையும் தானுகவே அவன் அநுபவிக்கிறபடியால் தனக்கு வேருக ப்ரம்மம்

தோன்றுகிறதில்லை. தனக்கு வேறாக இரண்டாவது வஸ்துவே சிலஸமயத்தில் தோன்றாமலேயிருக்கும்படி "ஸமாதி" தனக்குஸித்திக் கிறபடியால் ஸமாதியிலிருந்து தான் கலைந்த பிற்பாடு இந்த உலகம் தோன்றினாலும், இல்லாதது இருப்பதுபோல் தோன்றுகிறது என்ற காரணத்தைக்கொண்டு அந்த ப்ரபஞ்ச வாழ்க்கையில் அந்த வித்வானுக்கு ஆஸக்தியே எற்படுவதில்லை. இதனால் ஐந்தாவது பூமிக்கு "அஸம்ஸக்தி" என்றபெயர் ஏற்பட்டது. இந்த பூமியை ஸுஷுப்திக்கு ஸமமாகச்சொல்லலாம். தூங்கும்பொழுது உலகம் தோன்றுகிறதில்லை விழித்துக்கொண்டால் தோன்றுகிறது. அதுபோல் ஐந்தாவது பூமியிலுள்ள வித்வான் ஸமாதியிலிருக்கும் பொழுது உலகம் தோன்றுகிறதில்லை. ஸமாதியிலிருந்து தானாகக் கலையும் பொழுது உலகம் தோன்றுகிறது. இந்த ஐந்தாவது பூமியிலுள்ளவன், தூங்குகிறவன் தானாக விழித்துக்கொள்ளுவதுபோல், ஸமாதியிலிருந்து தானாகவே விழித்துக்கொள்வான். ஆகிலும் உலகத்தில் கொஞ்சமேனும் பற்றுதலிராது. இவனுக்கு "வரன்" என்ற பெயர் சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆறாவது பூமி "அபாவனை"யாகும். அதாவது: அதற்குக் காட ஸுஷுப்தியை உதாரணமாகச் சொல்லலாம். அதாவது ஒருவன் தூங்க ஆரம்பித்தால், தானாக எழுந்திருப்பதில்லை. இன்னொருவன் தட்டி நிர்ப்பந்தப்படுத்தினால் தான், எழுந்திருப்பது என்பது காட ஸுஷுப்தியாகும். இந்த ஆறாவது பூமியிலுள்ளவனும் தானாக ஸமாதியிலிருந்து எழுந்திருப்பதில்லை. அன்யர்களுடைய நிர்ப்பந்தத்தால் விழித்துக்கொள்ளுவான். அப்பொழுது அவனுக்கு உலகம் உலகமாகத் தோன்றாமல் ப்ரம்மமாகத்தான் தோன்றும். அதனால் அந்த பூமிக்குப்பதார்த்த "அபாவனை"யென்றும்பெயர் ஏற்பட்டது. அந்தப் பூமியிலுள்ளவனுக்கு வரீயான் என்ற பெயர் சாஸ்த்ரங்களிற் கூறப்பட்டிருக்கின்றன.

ஏழாவதுக்கு "துரீயம்" என்று பெயர். அதாவது பரம்பொருளாகிய ப்ராம்மத்தினிடத்தில் ஸமுத்திரத்தில் போட்ட உப்பைப்போல் தான் லீனனுகித் தானுகவும் ஸமாதியிலிருந்து விழித்துக்கொள்ளுவதில்லை. அந்நியர்களின் நிர்ப்பந்தத்தாலும் விழித்துக்கொள்ளுவதில்லை. எப்பொழுதும் ப்ரம்மமாகவே விளங்கி வருகிருன். ஜாகரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்று மூன்று அவஸ்தைகள் ப்ரஸித்தமாக உள்ளன. ஜாகரத்திலும், ஸ்வப்னத்திலும், பாவனையென்ற அநுபவமானது உண்டு. ஆனுல் ஜாகரத்தில் ஸ்தூல பதார்த்தத்தைப் பொறுத்தது. ஸ்வப்னத்தில்ஸூக்ஷ்மபதார்த்தத்தைப் பொறுத்தது. ஸுஷுப்தியில்ஸ்தூலத்தைப் பொறுத்தோஸூக்ஷ்மத்தைப்பொறுத்தோ பாவனையென்ற அநுபவமேயில்லை. அபாவனை தான் உள்ளது. ஆகையால் பாவனையோ, அபாவனையோ, அவஸ்தைகளின் லக்ஷணமாகும். துரீயமான நிலைமையில் பாவனையென்ற அவஸ்தையின் லக்ஷணமோ அபாவனையென்ற அவஸ்தையின் லக்ஷணமோ ஒன்றுமில்லாததினுல் மூன்று அவஸ்தைகளுக்கும் விலக்ஷணமானதினுல் "துரீயம்" என்று ஏழாவது பூமிக்குப் பெயர் ஏற்பட்டது. அந்தப் பூமியிலுள்ளவனுக்கு வரிஷ்டன் என்று பெயர்.

ஐந்து, ஆறு, ஏழு, இந்த மூன்று பூமியிலுள்ளவர்களை முக்தர்கள் என்றே சொல்லலாம். ஜலத்தில் பஞ்சும் முழுகிறதுண்டு. ஆனுல் சற்று நேரம் கழித்துத் தானுகவே அந்தப் பஞ்சு மேலே வந்துவிடும், அதுபோல் ஐந்தாவது பூமியிலுள்ள வித்வான், பஞ்சுபோல் தானிருந்துகொண்டு ப்ரம்மமாகிய ஆனந்தக்கடலில் தான் மூழ்கிவிட்டு ஸ்வயமாகவே ப்ரபஞ்ச வாழ்க்கையிலும் வருகிருன். ஜலத்தில் கல்லும் மூழ்கிறதுண்டு. ஆனுல் சற்று நேரம் கழித்து, கல் தானுக மேலே வாராது, மற்ருெருவன் எடுத்தால் மேலே வரும். அதுபோல் ஆருவது பூமியிலுள்ளவன் கல்லுக்குச் சமமாகத்தானி

ருந்துகொண்டு ப்ரம்மமாகிய ஆனந்தக்கடலில் மூழ்குகிறான். தாகனு ஸமாதியிலிருந்து ப்ரபஞ்ச வாழ்க்கைக்கு வருகிறதில்லை. மற்றவர்களுடைய நிர்ப்பந்தத்தால் வருகிறான். ஜலத்தில் உப்புக்கட்டியும் மூழ்குகிறதுண்டு. அது சற்று நேரம் கழித்துத் தானாகவும் வெளியில் வராது. அன்னியனால் எடுத்து வெளியிற் கொண்டுவரவும் முடியாது. ஜலத்தோடு ஜலமாகக் கரைந்துவிடும் அதுபோல் ஏழாவது பூமியிலுள்ளவன் தான் உப்புக்கு ஸமமாக இருந்துகொண்டு ப்ரம்மமாகிய ஆனந்தக்கடலில் மூழ்குகிறான். தானாகவும் வெளியில் வருகிறதில்லை. அந்நியனுடைய நிர்ப்பந்தத்திற்காகவும் வெளியில் வருகிறதில்லை. ப்ரம்மத்தோடு ப்ரம்மமாக ஆகிவிட்டான்.

ஐந்தாவது பூமியிலுள்ள "வரன்" என்ற வித்வானுக்கு பஞ்சை உதாரணமாகவும், ஆறாவது பூமியிலுள்ள "வரீயான்" என்றவித்வானுக்குக்கல்லைஉதாரணமாகவும், ஏழாவது பூமியிலுள்ள "வரிஷ்டன்" என்ற வித்வானுக்கு உப்பை உதாரணமாகவும் வைத்து விசாரித்தால் ஐந்து, ஆறு, ஏழு, இந்த பூமிகளிலுள்ள வித்வான்களுடைய வேற்றுமையானது பாமர ஜனங்களுக்குக்கூட நன்றாய் விளங்கும். மூன்று பேர்களுக்கும் ஆனந்த அநுபவம் என்பது ஸமானம்தான். இந்த மூன்று பூமிகளும் மஹா பலபூமிகளாக ஆகும். நான்காவது பூமி அவாந்தரபலமாக ஆகும். அதற்குக் கீழான முதல் மூன்று பூமிகளும் ஸாதன பூமிகளாக ஆகும். அவாந்தரபல பூமியிலோ, மஹாபல பூமியிலோ, ஏறினவர்களைப்பற்றிவிசாரமேயில்லை. ஸாதன பூமியென்ற "சுபஇச்சை" "விசாரணை" "தனுமானஸீஎன்ற" மூன்று பூமிகளில் ஏறி, ஸத்வாபத்தி முதலான பல பூமிகளில் ஏறுவதற்கு முந்திக் காலகதியால் ஆயுள் முடிந்துவிட்டதேயானால் அவர்களை யோகப்ரஷ்டர்கள் என்று சாஸ்த்ரமும் வித்வான்களும் கூறுகிறார்கள். அந்த யோகப்ரஷ்டர்களுக்கு போகவாஸனை அல்பமாகவும்

வைராக்யம் ப்ரபலமாகவுமிருந்தால் அவர்களுக்கு ப்ரம்ம நிஷ்டர்களான ப்ராமணர்களுடைய குலத்தில் ஜன்மாவையும், வைராக்யம் அல்பமாயும் போகவாஸனை ப்ரபலமாகமிருந்தால் ப்ரம்மவித்துக்களான ராஜாக்களுடைய குலத்தில் ஜன்மாவையும், சாஸ்த்ரமே கூறுகிறது. இந்த பகவத்கீதா சாஸ்த்ரத்திலேயே ஆருவது அத்தியாயத்தில் நன்ருகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரகிருதத்திலுள்ள அர்ஜுனனோ வைராக்யம் மந்தமாயும், போகவாஸனை ப்ரபலமாயுள்ள யோகப்ரஷ்டனென்றே சொல்லுவதில் ஆக்ஷேபணையே கிடையாது. அப்படி யோகப்ரஷ்டனில்லாமற் போனல் பாரதவம்சத்தில் ஜனிக்க முடியாது. ப்ரம்மநிஷ்டர்களான பரதர் முதலான ராஜாக்களால் அலங்கரிக்கப்பட்ட மஹாவம்சத்தில் அர்ஜுனன் ஜனித்திருப்பதிலிருந்தே அவன் யோகப்ரஷ்டன் என்று வெளியாகிறது. இந்த கீதாசாஸ்த்ரத்திலேயே பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனை "பாரத, பாரத" என்று அடிக்கடி ஸம்போதனம் செய்வதிலேயே அர்ஜுனன் யோகப்ரஷ்டன் என்பதைபகவான்ஸூசிப்பிக்கிருர். "பா" என்ருல் ஞானயோகம். அதில் "ரதன்" என்ருல் ஆஸக்தியுள்ளவன், என்றுஅந்தப் பதத்தின் பொருள் வெளியாகும். யோகப்ரஷ்டனுக்கு யாதொரு விதமான நியமத்தையும் எதிர் பார்க்காமல் தத்வோபதேசம் பண்ணலாம், என்ற நியமத்தைபநுஸரித்து அர்ஜுனன் கேட்காமலே ப்ரம்மாத்மதத்வஞானயோகத்தை பகவான் தானகவே உபதேசிக்கிருர்.

ஒரு மாணவன் ஒரு பள்ளிக்கூடத்தில் அந்தப் பள்ளிக்கூட விதிகளுக்குட்பட்டு ஒரு வருஷம் முழுவதும் படித்து அந்த வருஷத்திய பரீக்ஷையில் தான் தேர்ச்சியை அடையாமலிருந்தாலும் அடுத்த வருஷம் பள்ளிக்கூடத்து விதிகளுக்குட்பட்டுப் பள்ளிக்

கூடத்திற்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்ற நியமம் உண்டா? தன் வீட்டிலேயே ஸ்வதந்த்ரமாக தான் படித்துப் பரீக்ஷைக்குப் போகலாமல்லவா ? அதை யோகப்ரஷ்டனுக்கு உதாரணமாக வைத்துக்கொள்ளலாம். ஒரு ஜன்மாவில் நியமங்களை அநுஷ்டித்துத் தான் சரீரத்தைக்கிருசம் செய்துகொண்ட பிற்பாடு மறு ஜன்மாவிலும் அப்படியேநடந்துகொள்ளவேண்டுமென்றநியமமில்லை. அது போல்தான் அர்ஜுனனும், அவன் யோகப்ரஷ்டனுனதால் அவனிடம் யாதொரு நியமத்தையும் எதிர் பார்க்காமலே பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஆத்மதத்வஞானத்தை உபதேசம் பண்ணினது நியாயமே. மேலும், அர்ஜுனன் ஒரு நிமித்தமாத்திரம் தான். ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தினின்றும் ஸகல ப்ராணிகளையும் கரையேற்றி விடுவதே பகவானுன ஸ்ரீகிருஷ்ணனின் உத்தேசமல்லவா? அர்ஜுனனுக்கு யுத்தத்திலுள்ள மோஹத்தைப் போக்கடிப்பதற்காக அர்ஜுனனுக்கு பகவான் ஏதோ உபதேசம் செய்தார்; அதனுல் நமக்கு என்ன என்று நினைத்து ஔதாஸீன்யமடையாமல் எல்லா ஆஸ்திக மஹாஜனங்களும் முன் வந்து அர்ஜுனனுக்கு பகவான் உபதேசத்ததின் ஸாரம் இன்னதென்பதைத் தெரிந்துகொண்டுதான், அதை அனுஷ்டானத்திற்கும் கொண்டுவந்துஇஹத்திலும் பரத்திலும் ஸகலவிதமான சிரேயஸ்ஸுகளையும் அடைவார்களென்ற நம்பிக்கையை முன்னிட்டுத் தான், அர்ஜுனனுக்கு பகவான் உபதேசம் பண்ணின உபதேசங்களை, நம்பர் வாரியாக பிரித்துப்ராணிகளுடைய நன்மைக்காக எளிய தமிழ் நடையில் ஸரளமான உதாஹரணங்களுடன் எழுதப்படுகிறது என்பதை அறியவும்.

முதலாவதான உபதேசம்:—

(தொடரும்)

# ராமாயணம்.

## விச்வாமித்ர யாகம்.

சென்ற மாதத்தொடர்ச்சி.

முன் சொன்னபடி விச்வாமித்ர மஹர்ஷியானவர் ஸித்தாச்ரமத்தில் தான் செய்த யாகமானது உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு ஏற்பட்ட "காயத்ரீ ஹோமம்" ஆனதினால் அந்த யாகத்திற்கு தர்மபத்னியினுடைய ஸஹாயம் அவச்யம் வேண்டுமென்பது இல்லாததினாலும், ராமன், லெக்ஷ்மணனுடன், ஸித்தாச்ரமத்திற்குப் போன காலத்தில், விச்வாமித்ர மஹர்ஷிக்கு தர்மபத்னியானவள் அங்கு இல்லை யென்பது ஸித்தமாகிறது. தவிரவும், விச்வாமித்ர மஹர்ஷிக்குத் தனது யாகத்திற்கு விக்னத்தைச்செய்ய வந்த ஸுபாஹுவையோ, மாரீசனையோ, அல்லது மற்ற ராக்ஷஸர்களையோ, ஜயித்து அவர்களைச் சாம்பலாகச் செய்வதற்குத் தபோபலம் உண்டு. ஆயினும் அவர்களைச் சபிப்பதினால், தான் அனேக காலம் செய்த தபோ மஹிமை வீணாக ஆகிவிடுமென்று நினைத்து, தான் ஸ்வயமாக அவர்களைச் சபிக்கவில்லை. மேலும், தனக்கு ஒருவன் தீங்கைச் செய்தானானால், அதற்கு தானும், அவனுக்குப் பதிலாகத் தீங்கு செய்வது என்பது, நீதி சாஸ்த்ரத்திற்கு விரோதமானது. ராஜாங்கத்தில் தனக்கு தீங்கு செய்தவனைத் தெரிவிப்ப

தே தனது கடமையாகும். இந்த நீதியை அவலம்பித்துத்தான், விச்வாமித்ர மஹர்ஷியும், தனக்கு அபராதம் செய்த ராக்ஷஸர்களைத் தான் யாதொரு விதமாகவும் கண்டிக்காமல் ஸர்வ ஜகத்திற்கும் நாதனான ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவே ஸ்ரீராமனாக இந்தப் புண்ய பூமியில் அவதாரம் செய்திருக்கிறார். அந்த மஹானுபாவனிடம் நமக்கேற்பட்ட இந்தக் கஷ்டத்தைத் தெரிவித்தால் போதுமானது அந்த ராமன் மூலமாக ராக்ஷஸர்களை ஜயித்து, இந்த "காயத்ரீ ஹோமம்" என்ற யாகத்தை ஸம்பூர்ணமாகச் செய்துகொண்டு ஜன்ம ஸாபல்யத்தை யடைவதுதான், அஹிம்ஸையைக்கொண்ட நமது ஆச்ரமத்திற்கு அழகாகும் என்று நினைத்துத்தான் ஸ்ரீராம பிரானை ப்ரார்த்தித்தார். தனக்கு ராக்ஷஸர்களை ஜயிக்க சக்தியில்லாமல் இல்லை; சக்தி உண்டு. தபஸ்விகளுக்கு அது அழகல்ல.

ஸ்ரீராமனைப் பரப்பொருள் என்று, தான் அறிந்து இருக்கும் பொழுதும், ஸமஸ்தமான உலகமும் அவனுடைய ப்ரஜைகளென்று தான் அறிந்து இருக்கும்பொழுதும், ஸுபாஹுவும், மாரீசனும் கடவுளுடைய ப்ரஜையானதினால், அந்தக் கடவுள் ப்ரத்யக்ஷமாக அவதரிக்கும்பொழுது, நாம், அந்த ஸுபாஹு, மாரீசர்களை நிக்ரஹம் செய்வதில் அதிகாரமுள்ளவனாக ஆகமாட்டோம், என்றும் மஹர்ஷி நினைத்திருக்கவேண்டும் என்பது, வெளியாகிறது. ராமனை விச்வாமித்ர மஹர்ஷி பரப்பொருள் என்று அறிந்து இருக்கிறார் என்றதற்கு தசரத சக்ரவர்த்தியினிடம் ராமனுடைய தத்வங்களை விச்வாமித்ர மஹர்ஷி எடுத்து உரைத்திருப்பதே அத்தாக்ஷியாகும் அத்துடன், ராமனை விச்வாமித்ர மஹர்ஷியானவர் அயோத்யா நகரத்தினின்றும், ஸித்தாச்ரமத்திற்கு அழைத்துக்கொண்டு வரும் பொழுது "சோணபத்ரா" என்ற நதி தீரம் வரும்பொழுது, அன்று அஸ்தமனம் ஆய்விட்டது. அதனால் ராமன், லக்ஷ்மணன், விச்

வாமித்ர மஹர்ஷி, இந்த மூன்று பேர்களும், அன்று ராத்ரியை அந்த நதி தீரத்திலேயே கழித்தார்கள். ப்ரபாத காலத்தில் விச்வாமித்ர மஹர்ஷி, சுமார் மணி 4-க்கே விழித்துககொண்டு விட்டார். ஸ்ரீ ராமனோ கொஞ்சம்நித்ரையினுல் பாவசத்தை யடைந்தவர் போல் நடித்துக் கொண்டிருந்தார். விச்வாமித்ர மஹர்ஷியும், அருகிற் சென்று, அந்தக் காலத்தில் ராமனுடைய முகத்தில் வீசுகிற லக்ஷ்மி களையைத் தான் பார்த்துவிட்டு, "ஹே ராமா! உன் முகத்தில் தோன்றுகிற ஒளியைக் கவனித்தால், நீ பரம் பொருள் என்பதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. உலகத்திற்கெல்லாம் மூலகாரண மான பொருள் நீயே. அவ்விதமான உன்னைப் பிள்ளையாகப் பெற்ற பாக்யத்தை கௌஸல்யாதேவி அடைந்தாள். அவளைப்போல் பாக்யவதியான ஸ்திரீ மற்றொருத்தி உலகத்தில் இருப்பதாக நான் நினைக்கவில்லை. மஹத்தான புண்யத்தை ஜன்மாந்தரத்தில் செய்தவள் கௌஸல்யாதேவியே" என்று ராமன் தூங்குங்காலத்தில் அந்த ராம னுடைய முகத்தில் தோன்றின ஒளியைக்கொண்டு, அந்த ராமனை பரம்பொருள் என்றே தீர்மானித்து அந்தப்பரம்பொருளுக்குத்தா யான கௌஸல்யாதேவியை ஸ்தோத்ரம் செய்தார்.

பிறகு "ராமா! ப்ராதக்கால ஸந்த்யாதேவியானவள் ஆவிர்ப்ப வித்துவிட்டாள். ஆந்ஹிகத்தைச்செய்யவேண்டாமா? நீ எழுந் திரு, உன்னைப்போலொத்த ஒரு ச்ரேஷ்ட புருஷன் ஸந்த்யாவந்தன முதலான ஆந்ஹிகத்தை ஒழுங்காக அனுஷ்டித்துக்காட்டினுல் தானே, மற்றப்பாமர ஜனங்களுக்கு அந்தக்கர்மாக்களில் ச்ரத்தை எற்படும். ஆகையால் நீ சீக்ரம் எழுந்திருந்து ஸந்த்யாவந்தனம் பண்ணவேண்டும்" என்று ராமனிடம் விச்வாமித்ர மஹரிஷி சொன் னார். இதன் உண்மையைக்கவனித்தாலும் விச்வாமித்ர மஹர்ஷி ராமனைப்பரம்பொருள் என்று தெரிந்துகொண்டிருக்கிறார் என்பது வெளியாகிறது. அதன் உண்மையை அடியில் வருமாறு அறியவும்.

அதாவது "நீசெய்! "நான் செய்யவேண்டும்"('செய்'என்பதை "லோட்" என்றும், 'செய்யத்தகுந்தது' என்பதை "தவ்யப்ரத்யயம்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவனை ஒரு கர்மாவைச்

செய்யும்படி சொல்லும்பொழுது "செய்" என்ற 'லோட்டையும்' தான் அந்தக்கர்மாவைச்செய்யவேண்டுமென்ற ஸமயத்தில் 'செய்யத்தகுந்தது' என்ற "தவ்யப்ரத்யத்தையும் உபயோகப்படுத்த வேண்டும், என்ற மர்யாதையானது சாஸ்த்ரத்தில் ஏற்பட்டிருக்கிறது.) விச்வாமித்ரமஹர்ஷியோ ராமனை ஸந்த்யாவந்தனம் பண்ணவேண்டுமென்று சொல்லவில்லை 'செய்' என்ற பொருளடங்கிய 'குரு' என்ற சப்தத்தை விச்வாமித்ர மஹர்ஷிப்ரயோகிக்கவில்லை. 'செய்யவேண்டும்'(அதாவது செய்யத்தகுந்தது)என்ற பொருளடங்கிய 'கர்த்தவ்யம்' என்ற பதத்தை விச்மாமித்ர மஹர்ஷியானவர் உபயோகித்துக்கொண்டார். அதினால், அந்த மஹர்ஷியானவர் தனக்கு ஸந்யாவந்தனம் செய்யவேண்டுமென்ற அவச்யத்தை ராமனிடத்தில் காட்டியதாகத்தெரிகிறது.

அதாவது, "ராமா" ப்ராதக்காலத்தில் ஸந்த்யாதேவியானவள் உதித்துவிட்டாள், எனக்கு "ஸந்த்யாவந்தனம" என்ற ஆந்ஹிகத்தைச் செய்யவேண்டும்' நீ எழுந்திரு" என்று சொன்னதாக ஆகும். அதின் கருத்தையும் அறியவும். "ராமா! உண்மையினால் உன்னுடைய ஸ்வரூபம் 'நிர்க்குணமும்' 'நிர்விசேஷமும்' ஸச்சிதானந்தரூபமுமே.' அந்த ஸ்வரூபமோ பரமார்த்துதசை என்ற மோக்ஷ நிலையில் தான் வித்வத்ஜனங்களால் அனுபவிக்கக் கூடும். அந்த ஸ்வரூபத்தை யாரும் இந்த வெளிக்கண்களால் காணமுடியாது. அந்த ரூபமே உனக்கு "பரரூபம்" என்று சொல்லப்படும். அத்துடன் உனக்கு "அபரமான ரூபமும்" உண்டு. 'ஸகுணமும்' ஸவிசேஷ' முமே அதுவாகும். அந்த நிலைமையிலோ, நீ ஸகல உலகத்தையும் ப்ரகாசித்து வருகிற ஸூர்யமண்டலத்தினுடைய நடுவில் விளங்கிவருகிறாய். முன் சொன்ன 'நிர்க்குணத்தை' இந்த வெளிக்கண்களால் பார்க்கமுடியாது என்றாலும் ஸூர்யமண்டலத்தினுடைய நடுவில் விளங்கிவரும் "ஸகுணத்தையாவது இந்த வெளிக்கண்களாற் பார்க்கலாமோ என்றால், அதுவும் ஸாத்யமாகவில்லை. ஸூர்யன் தனது தேஜோமயமான கிரணங்களால் தனது மண்டலத்துக்குள் இருக்குப் பரமபுருஷனை மறைத்து ஒருவருக்கும் கண்ணில் தென்படாமல் செய்துகொண்டுவருகிறான்.

எங்கும் வ்யாபகமான நிர்க்குணமான உன் ஸ்வரூபத்தைப்பார்ப்ப தற்கு யோகமாயை தடையாக இருந்து வருகிறது. ஸூர்யமண் டலத்தினுடைய நடுவில் விளங்கிவருகிற உனது அழகான ஸகுண வடிவைப்பார்ப்பதற்கோ, ஸூர்யனுடைய தேஜோமயமான கிர ணங்களே தடையாக இருந்து வருகின்றன. இவ்விதம் ப்ராணி களுக்கு, ஸகுணமான உன்னுடைய ஸ்வரூபத்தின் தர்சனமோ, 'நிர்க்குணமான உன் ஸ்வரூபத்தின் ஸாக்ஷாத்காரமோ, ஏற்படுவ தற்குக்காரணமில்லாமல் ஆய்விட்டது. நீ ஒருவன்தான் ஸகுணமா யும் நிர்க்குணமாயும் விளங்கிவருகிறாய். ஸகுணம் வேறு, நிர்க்குணம் வேறு என்ற ஸித்தாந்தம் ரொம்பவும் பிசகானது, ஸகுணமே, நிர்க் குணம், நிர்க்குணமே ஸகுணம். அந்த இரண்டும் ஒரே தத்வந்தான். ப்ராணிகளுடைய புத்தியை அனுஸரித்து வெவவேறு போல் தோன்றுகிறது. அந்த இரண்டும் ஒன்றாக இருக்கும் அகண்டமான தத்வம்தான், ஸந்த்யாவந்தனம் என்ற ஸத்கர்மாவில் உபாஸிக்கப் படும் தெய்வமாகும்.

அதிலும், அந்தக்கர்மாவில் முக்யமான 'அர்க்யப்ரதானம்' என்ற கர்மாவில் அகண்டமான உன் ஸ்வரூபம்தான் த்யானிக்கப்படுகிறது, நிர்க்குணமான உன் ஸ்வரூபமோ, ஸகுணமான உன் ஸ்வரூபமோ, கண்ணுக்குப்புலப்படுவது அஸாத்யமாக இருப்பதைக்கொண்டு, எல்லா வித்வான்களும் அர்க்யப்ரதானம் பண்ணும் காலத்தில் உன் னையே நினைத்துக்கொண்டு எம்பி, எம்பி ஆகாசத்தில் அர்க்யத்தை விடுகிறார்கள். நீயோ தத்காலம் பரம கருணையினால் நிர்க்குணமான உன் ஸ்வரூபத்தையும் ஸகுணமான உன் ஸ்வரூபத்தையும் கூட அபேக்ஷித்து, ரொம்பவும் அளவிடமுடியாத அழகு தங்கிய திவ்ய மங்களவிக்ரஹத்தோடு தசரதசக்ரவர்த்தியின் திருக்குமாரனாக லீலாவதாரம் செய்திருக்கிறாய் இந்த லீலாவதாரம் என்ற இந்த

ஸ்வரூபமோ ஸகலப்ராணிகளுடைய வெளிக்கண்களுக்கும் ஸுலப மாகப்புலப்படக்கூடியதாக இருக்கிறது. இவ்வளவு நாளாக நான் உன்னை நினைத்து ஆகாசத்தில் அர்க்யத்தை விட்டபோதிலும், அர்க் யப்ரதானம் என்ற கர்மாவில் த்யானிக்கப்படுகிற தெய்வமான நீ இப்பொழுது ப்ரத்யக்ஷமாகப்புலப்படும் பொழுது உன் கையிலே யே நான் அர்க்யத்தை விடுகிறேன். நீ ப்ரத்யக்ஷமாக வாங்கிக் கொண்டு, என்னை பூதனாகச்செய்யவேண்டும்", என்ற எண்ணத் துடன் தான் விச்வாமித்ர மஹர்ஷியானவர் "எனக்கு ஸந்த்யாவந் னம் பண்ணவேண்டும், ராமா, நீ எழுந்திரு' என்று ராமனை எழுப் பினதாகத்தெரிகிறது.

இந்த அபிப்ராயத்தை ராமாயணத்தில் சொல்லுகிறவனுக்குக் கர்மாவின் அவச்யத்தைக்காட்டுகிற 'கர்த்தவ்யம்' என்ற பதத்தை ப்ரயோகித்திருப்பதே ப்ரமாணமாகும். இவ்விதம் ராமனைப்பரம் பொருள் என்று விச்வாமித்ர மஹர்ஷி நன்றாய் அறிந்திருக்க ராக்ஷஸர்களைச்சபிப்பதில் தான் ஏன் ப்ரவேசிக்கிறார்? பரம்பொருளி னிடத்தில் 'நாம் இதை ஒப்புவித்துவிடுவோம்' என்று எண்ணியோ, அல்லது, "ஒருவன் ஸத்தர்மத்தை அனுஷ்டானம் பண்ணினனேயா னல், அதற்கு இடையூறுகள் எவ்வளவு வந்தாலும் பரம்பொருளே அந்த இடையூறுகளை நிவ்ருத்திசெய்து அந்த ஸத்கர்மாவைப்பரி பூர்ணமாகமுடித்துவைப்பார், என்பது திண்ணம்" என்பதற்குத் தான் அத்தாக்ஷியாக இருக்கவேண்டுமென்று நினைத்தோ, தான் ஸுபாஹு மாரீசன் முதலான ராக்ஷஸர்களை ஜயிக்கும் விஷயத்தை ராமனி டத்திலேயே ஒப்புவித்துவிட்டார். அதனால் மஹர்ஷிக்கு சக்தி யில்லையோ என்று நினைக்கவேண்டாம்.

(தொடரும்)

# சிவோத்கர்ஷம்.

சென்ற மாதத்தொடர்ச்சி.

முன் சொன்னபடி பசுக்கள் என்ற ஜீவகோடிகளைப் பசுபதியான பரமேச்வரன் கட்டிமேய்க்கும் பாசங்களோ மலம், மாயை, கர்மா என்று மூன்றுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

மலம் என்றால் காமமாகும். லோகத்தில் மலம் என்ற சப்தத்தால் சொல்லப்படுகிற அமேத்யம் முதலான வஸ்துக்கள் தனது சரீரத்தில் படக்கூடாதென்றும், அப்படித்தவறிச் சரீரத்தில் அந்த மலம் ஸம்பந்தப் பட்டுவிட்டால், ஜலத்தால் அந்த இடத்தை நன்றாகச் சுத்தப்படுத்தி ஸோப்பு முதலான வாஸனை த்ரவ்யங்களால் மனிதர்கள் வாஸனை உள்ளதாகச் செய்துகொள்வதுபோல், இந்தக்காமம் என்ற சாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற, அமேத்யமான வஸ்துவையும், தனது மனதில் ப்ராணிகள் ஸம்பந்தப்படாதிருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். அப்படித் தவறி ஸம்பந்தப்பட்டுவிட்டால், அந்தமனதை 'விவேகவிஞ்ஞானம்' என்ற சுத்த ஜலத்தால் நன்றாக அலம்பி, "ஸத்வாஸனை" "மோக்ஷவாஸனை" என்றது முதலான வாஸனா த்ரவயங்களாலும், நல்ல வாஸனையுள்ளதாகச் செய்யவேண்டும் என்று, வேதாந்த நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் காமமானது மலத்திற்கு மேலான அசுத்தமான பதார்த்தமானதினால், மலம், மாயை, கர்மா என்று சொல்லப்பட்ட மூன்று பாசங்களுள் மலம் என்ற பாசமானது காமமாகத்தான் ஆகவேண்டும்.

அத்துடன் காமத்தால் ஜயிக்கப்பட்ட புருஷர்களுக்குப் பரம சிவனுடைய தர்சனம் கிடைக்கும் என்பதே அஸாத்யமான கார்ய மாகும். காமனுக்குப் பரமேச்வரன் சத்ருவென்பதை யாரும் அறி யக்கூடும். அவ்விதம் பரமேச்வரனுக்கு விரோதியான காமனுக்கு எந்தப்ராணிகள் ஆதாரவைச் செய்கிறார்களோ அந்தப்ராணிகளுக்குப் பரமேச்வரன் புலப்படமாட்டான் என்பது நிச்சயம். அப்படிப் பரமேச்வரனுடைய தர்சனத்திற்கு இடையூறாக இந்தக்காமன் இருப்பதாலும், இந்தக்காமனை அசுத்தமான பதார்த்தமாகவே கருதவேண்டும். லோகத்தில் ப்ராணிகள் யமன் என்றதைக் கேட்டாலே நடுங்குவார்கள். காமன் என்றவனை ஆதரிக்கிறார்கள். இது முற்றிலும் பிசகானது. யமனுக்கும் காமனுக்கும், உள்ள தாரதம்யத்தை விசாரித்துப் பார்த்தால், காமன்தான் யமனைக் காட்டிலும் அயோக்யன் என்றது விளங்கும். யமனானவன் கர்மயோகமோ, ஞானயோகமோ, பக்தியோகமோ இந்த மூன்று களில் ஒருவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளாத நாஸ்திக ஜனங்களைத்தான் தனது வசமாகச் செய்து கொள்வான். அந்த நாஸ்திக ஜனங்களும், யமனைக் காணுவதற்கு முன்நிமிஷம் வரை யிலும் பரமநாஸ்திகனாக இருந்தாலும் யமனைக் கண்டவுடனாவது அந்தப்ராணிகள் "ஹே, பரமசிவா" "கங்காதரா" என்று பரமேச் வரனுடைய திருநாமங்களைச் சொன்னாலே போதும், அப்படி யுள்ளவனையும், அந்த யமன் தன் வசத்தில் இழுத்துக்கொள்வதில்லை. இதற்கு 'அஜாமிளன்' முதலானவர்களை உதாஹரணமாக வைத்துக் கொள்ளலாம்.

முன் காலத்தில் "அஜாமிளன்" என்று ஒரு ப்ராமணன் இருந் தான். அவனுடைய தாய் தந்தைகள், ரொம்பவும் வயது முதிர்ந்த வர்களும், குருடர்களுமாக இருந்தார்கள். அவர்களுக்கு இந்த

அஜாமிளன் என்ற புத்ரனைத்தவிர வேறு கதியில்லை. அந்த அஜாமிளனும் தினந்தோறும் தனது தாய் தந்தையரைத்தானே ஸ்நானம் செய்து வைத்து, காலத்தில் போஜனாதிகளையும் கொடுத்துக்காப்பாற்றி வந்தான். இவ்விதமிருக்கும்பொழுது, ஒரு தினம், தனது தாய் தந்தையருடைய ஸ்நானத்திற்காக ஒரு நதியில் ஜலம் கொண்டு வரப்போனான். அங்கு யுவதியான ஒரு சூத்ரஜாதிப் பெண்ணைக் கண்டான். அவளைக் கண்டவுடன் அவளிடம் மோஹமும் கொண்டான். இவனுடைய கர்ம வசத்தால் அவளுக்கும் இவனிடம் மோஹம் ஏற்பட்டது. இவ்விதம் இருவருடைய மனப்பொருத்தமும் எற்பட்டவுடன், இந்த அஜாமிளனும், அந்த சூத்ரஜாதிப்பெண்ணும், தாம்பத்யத்தை யடைந்து, நெடுநாளாக க்ரீடாரஸத்தில் மூழ்கி வந்தார்கள். அந்த அஜாமிளனுக்கு, குருடர்களாயும், வயது முதிர்ந்தவர்களாயும் உள்ள தாய் தந்தைகளின் நினைவே இல்லாமல் ஆகிவிட்டது. அந்தத் தாய் தந்தைகளும், இந்த அஜாமிளன் இப்படி போனபிறகு, தங்களுக்கு வேறு கதியில்லாதபடியால், பசி தாகத்தாலேயே இறந்துவிட்டார்கள். அத்துடன், அந்த அஜாமிளன், தான் சாஸ்த்ர ப்ரகாரம் கல்யாணம் செய்துகொண்ட சிறு வயதுள்ள தனது தர்மபத்னியையும், உபேக்ஷித்துவிட்டான். இவ்விதம், தாய், தந்தை, தர்மபத்னி இவர்கள் எல்லோரையும் உபேக்ஷித்துவிட்டு அந்த சூத்ரப்பெண்ணோடேயே தனது ஸமஸ்தமான ஆயுளையும் கழித்து, மஹாபாவியாக ஆய்விட்டான். ஸ்நானம், ஸந்தயை, ஜபம், தபஸ், ஹோமம், இவைகளில் யாதொன்றையும் அவன் கவனிக்கவில்லை.

இவ்விதம் கர்ம ப்ரஷ்டனாக ஆகி, அந்த சூத்ரப்பெண்ணோடேயே, தான் நெடுநாளும் வாழ்ந்து, கடைசியில் தனது உயிரைத்துறக்கும்படியான காலமும் வந்து சேர்ந்தது. அச்சமயம், அந்த சூத்ர

ஸ்திரீயிடம் அவனுக்குப் பிறந்த பத்துப் பிள்ளைகளுக்குள், பத்தாவதான பிள்ளை ஒரு வயது நிறைந்த சிசுவாக இருந்து வந்தது. அந்தக் குழந்தைக்கு "நாராயணன்" என்று பெயரிட்டு, அழைத்து வந்தான். இந்த அஜாமிளனுக்கு ப்ராணன் போகும் ஸமயத்தில் அந்த "நாராயணன்" என்ற கடைசிக் குழந்தையானது தவிழ்ந்து கொண்டு ஒரு பள்ளமான இடத்தில் விழுந்துவிடும்போல் விளையாடிற்று. அச்சமயம், இந்த அஜாமிளன் அந்தக் குழந்தையினிடத்திலுள்ள வாஞ்சையினால் "ஹே, நாராயணா, இங்குவா" என்று கூப்பிட்டுக் குழந்தையைத் தன்னிடம் அழைத்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்து, "நாராயணா" என்று சொல்லவும், இந்த அஜாமிளனுடைய உயிரும் போய்விட்டது. இவனுக்கு "நாராயணா" என்ற சப்தத்தைச் சொல்லும்பொழுது, இந்த சப்தமானது வைகுண்டாதிபதியான மஹா விஷ்ணுவைச் சொல்லுமென்றோ, பகவான் ஒருவன் இருக்கிறான் என்றோ அந்த அஜாமிளனுக்கு நினைவேயில்லை. தன் குழந்தையினுடைய நினைவாகத்தான் இருந்து, அந்த சப்தத்தைச் சொன்னான். ஆகிலும் அவன் மரித்தவுடன், அவனுடைய அருகில் வைகுண்டத்திலிருந்து மஹாவிஷ்ணுவினுடைய தூதர்கள், திவ்யவிமானத்துடன் இவனை வைகுண்டத்திற்கு அழைத்துப்போக வந்தார்கள். அதே ஸமயத்தில் யமதூதர்களும், பாசக்கயிற்றினால் இவனைக் கட்டியிழுத்து, இவனை யமலோகத்திற்கு அழைத்துப் போக வந்தார்கள். யமதூதர்கள் இவனை இழுக்க, விஷ்ணு தூதர்களும் இழுக்க அந்த இருவர்களுக்கும், பெரிய கலகம் ஏற்பட்டுவிட்டது.

பிறகு, இந்த அஜாமிளன் தாய் தந்தைகளையும், தர்மபத்னியையும், தள்ளிவிட்டு, சூத்ரப்பெண்ணினுடைய ஸம்பர்க்கத்தால், தான் கர்மப்ராஷ்டனாக ஆகி, மஹா பாபியாக இருந்தாலும், மரண காலத்

தில் நாராயணு என்ற சப்தத்தைச் சொன்ன மஹிமையினுல், மஹா பரிசுத்தனுக ஆகி, வைகுண்டம் போய் நித்யஸூரிகளுடைய கோடியில் இவன் ஒருவனுக ஆகிறதற்கு யோக்யனுக ஆகிவிட்டான், என்று தீர்மானம் ஆகி, விஷ்ணுதூதாள் திவ்யவிமானத்தில் அவனே எழுந்தருளச்செய்து வைகுண்டம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். யமதூதாளும் ப்ராணிகள் மஹா பாபிகளாக யிருந்தாலும், மாண காலத்திலாவது, பகவானுடைய திருநாமத்தை உச்சரித்தால் போதுமானது. அதிலும் பகவானுடைய நினைப்போடு உச்சரிக்கவேண்டாம். பிள்ளையைக் கூப்பிடும் வ்யாஜத்தாலோ, வேலைக்காரனைக் கூப்பிடும் வ்யாஜத்தாலோ, தலைவலி ஆறுதலுக்கோ, பகவானுடைய திருநாமத்தை உச்சரித்தால் போதும். அவனுடைய அருகில் நாம் போகக்கூடாது, அவன் பரம பாகவதோத்தமனுக ஆகிருன், நமது லோகம் அவன் வரமாட்டான் என்று சொல்லிக்கொண்டு யமதூதர்கள் யமலோகம் திரும்பிப்போய்விட்டார்கள். இந்தக் கதையால் ஸஜ்ஜனங்களிடம் யமன் போகிறதேயில்லை. துர்ஜனங்களிடம் தான் போகிருன். அந்த துர்ஜனங்களும், மாண காலத்தில், யத்ருச்சையாக பகவந்நாமாவை உச்சரித்தாலும், அவனிடமும் போகிறதில்லை என்றது வெளியாகிறது.

(இந்த ஸந்தர்ப்பத்தில், சிவோத்கர்ஷத்தைப் பலப்படுத்த விஷ்ணுவினுடைய நாமாவின் பெருமையைக் காட்டும் அஜாமிள உபாக்யானத்தை உதாஹாணமாகச் சொல்வது பொருத்தமாக ஆகுமா? என்று சிலர்கள் நினைக்கக்கூடும். அதற்குச் சமாதானம் சொல்லிவிட்டு, பிறகு ப்ரக்ருதமான விஷயத்தைச் சொல்வது உசிதமானதினுல் அந்த சங்கையின் ஸமாதானத்தைப் பின் வருமாறு அறியவும்.) அதாவது: சிவன் வேறு, விஷ்ணு வேறு என்ற ஸித்தாந்தமே ரொம்பவும் பிசகானது. கடவுள் என்றது ஒன்றுதான். ஒவ்வொரு

மதத்திலும், ஒன்றான கடவுளுக்கு வெவ்வேறான, திருநாமத்தையும், உருவத்தையும், அந்தந்த மதஸ்தர்கள் கற்பிக்கிறார்கள். பெயர் வெவ்வேறாக இருப்பதினாலும், உருவம் வேவ்வேறாக இருப்பதினாலும் கடவுள் வெவ்வேறாக ஆகமாட்டான். ஹிரண்யகர்ப்பன் என்ற ப்ரும்மா முதல் சிற்றெறும்பு என்ற கீழ் ஜந்து வரையிலும், சரீரங்கள் வெவ்வேறாகக் காணப்பட்டாலும், ஜீவன் ஒன்றுதான் என்று சொல்கிற சாஸ்த்ரம் கடவுளை வேறு என்று சொல்லுமா? சிவனோ, விஷ்ணுவோ, ப்ரம்மாவோ, அல்லாவோ, மற்ற எந்த விதமான பெயருள்ள மற்ற எந்த தெய்வமோ, எல்லாம் ஒன்றான ஒரே அகண்டஸ்வரூபம் என்றுதான், நமது ஸித்தாந்தமாகும். கங்கை ஒன்றானாலும், ஹனுமந்தகட்டம், துர்க்காகட்டம் கேதார கட்டம் என்று அநேக கட்டங்கள் (அதாவது, இறங்கி ஸ்நானம் செய்யும் இடங்கள்) பிராணிகளால் வேவ்வேறாகக் கற்பிக்கப்பட்டிருப்பதுபோல், ஒரே கடவுளுடைய ஸ்வரூபத்தில், சிவன், விஷ்ணு என்ற நாமபேதங்கள் கற்பிக்கப்படுகின்றன. கடவுள் ஒன்றுதான். வ்ருக்ஷம் ஒன்றானாலும், அதில் வேர், கிளைகள் என்பவைபோல் கடவுள்ஒன்றானாலும்அதில் அபரிச்சின்னமான தேவதை(அதாவது, மூலதேவதை) பரிச்சின்னமான தேவதைகள் (அதாவது கிளை தேவதைகள்)என்ற தாரதம்யங்களை உபாஸனையின் ஸௌகர்யத்திற்காகக்கற்பிக்கவேண்டியது அவச்யமானதினால், அந்தக்கற்பனையை அனுஸரித்துக் கிளைகளைக் காட்டிலும் வேர் மேலானதுபோல், பரிச்சின்ன தேவதைகளைக்காட்டிலும், அபரிச்சின்னமான தேவதை மேலானது என்பது அனுபவ ஸித்தமானதினால், அந்த அபரிச்சின்ன தேவதையை "சிவன்" என்ற நாமாவினாற் கற்பித்துக் கொண்டு, அதினுடைய உத்கர்ஷத்தை இந்தப் பத்திரிகையில் பிரசாரம் செய்கிறபடியால், விஷ்ணு வேறு, சிவன் வேறு என்ற பேதத்

தை வைத்துக்கொண்டு, வீணாக ஆக்ஷேபிக்கிறவர்களுக்கு இந்தப் பத்திரிகையில் அவகாசம் ஏற்படாதென்பது திண்ணம்.

அந்த அபரிச்சின்ன தேவதை விஷ்ணுவென்றுதான் சொல்ல வேண்டுமென்று தோன்றினால், விஷ்ணுவினுடைய உத்கர்ஷம் தான் இந்த பத்திரிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறதென்பதை அறியவும். நாமரூபமற்ற கடவுளுக்கு இந்த நாமாவைத்தான் கற்பிக்கலாம். அந்த நாமாவைக் கற்பிக்கக்கூடாதென்ற நியமம் எது? ஒருவன் ஒரு நாமாவைக் கற்பித்தால், மற்றொருவன் மற்றொரு நாமாவைக் கற்பிக்கிறான். நாமாவைக் கற்பிப்பதில் அவனவனுடைய புத்தி சக்திதான் காரணம் ஆகும். இந்தப் பத்திரிகையை ப்ரசுரம் செய்கிறவருடைய புத்தி சக்தியை யனுஸரித்து, அபரிச்சின்ன தேவதைக்கு சிவனென்ற நாமாவைக் கற்பித்து, 'சிவோத்கர்ஷம்' என்ற நாமாவுடன் இந்த வ்யாஸமானது ப்ரசுரம் செய்யப்பட்டு வருகிறது. கிளைகளைக்காட்டிலும் வேர் மேல் என்பதில் யாருக்குத்தான் ஆக்ஷேபணை யிருக்கும். கிளைகளுக்குச் சாரம் கட்டிக்கொண்டு தண்ணீர் ஊற்றுகிற வழக்கம் உண்டா? வேரில் தானே தண்ணீர் ஊற்றுகிறது வழக்கம். வேரில் தண்ணீர் ஊற்றினதினால், கிளைகளும் தளிர்த்துக் காய்கனிகளைக் கொடுக்கும் அல்லவா? அன்றிக் கிளைகளுக்குத் தனியாகத் தண்ணீர் ஊற்றும் வழக்கமும் இல்லை, ஊற்றுவதிற்பயனும் இல்லை.

அதுபோல், பரிச்சின்ன தேவதையைக் காட்டிலும் அபரிச்சின்ன தேவதை மேல் என்பதில் யாருக்கு ஆக்ஷேபணை யிருக்கும்? அபரிச்சின்ன தேவதையின் உபாஸனத்தால் பரிச்சின்ன தேவதைகளும்திருப்தியடைவார்கள்என்பதில்யாருக்குஆக்ஷேபணையிருக்கும்? அந்த அபரிச்சின்ன தேவதை தான் "சிவன்" என்று இவ்விடத்திற்

கூறப்பட்டிருக்கிறது. அவனுடைய உத்கர்ஷம் தான் சொல்லப் படும். விஷ்ணுவைத்தான் அபரிச்சின்ன தேவதை என்றால் அதுவும் இஷ்டமே. அவனுடைய உத்கர்ஷம் தான் சொல்லப்படுகிறது. கடவுள் ஒன்று என்ற ஸித்தாந்தத்தில் இந்த வ்யவஹாரத்திற்கு அவகாசமே இல்லை. ஆகையால் சிவோத்கர்ஷத்தை ஸாதிப்ப தற்கு விஷ்ணுவினுடைய உத்கர்ஷத்தைக் காட்டும் அஜாமிள உபாக்யானத்தை உதாஹரணமாகச் சொல்வது பொருத்தமாகுமா என்ற கேள்விகளுக்கு, மேல் சொன்னபடி ஸமாதானத்தை யறியவும். இந்த விவாதத்தால் என்ன ப்ரயோஜனம். ப்ரக்ருத விஷயத்தையே யனுஸரிப்போம்.

யமனானவன் அஸஜ்ஜனங்களிடம் தான் போவான், என்று சொல்லப்பட்டிருக்கிறது. காமனானவன் ஸஜ்ஜனங்களையும் நரகக் குழியில் அமுக்கிவிடுவான். அதற்கு விச்வாமித்ரமஹர்ஷியையே உதாஹரணமாக வைத்துக்கொள்ளலாம். அவரைப்போல் மஹா தபஸ்வி வேறு ஒருவர் உண்டா? அவரைக்கூட "மேனகை" என்ற தேவதாஸியினிடத்தில் வசப்படுத்திவிட்டு, பத்து வருஷ காலம் விச்வாமித்ரமஹர்ஷியைக் கட்டிப்பிரளச்சொல்லிவிட்டு' வ்யாமோஹப்படுத்தவில்லையா? அவளிடத்தில் விச்வாமித்ருக்கு "சகுந்தலை" என்ற ஒரு பெண்ணும் பிறந்த விஷயம் உலக ப்ரஸித்தமானது. பகவந்நாம ஸங்கீர்த்தனமோ, இதிஹாஸபுராண மோ, வேதாந்தமோ ஒன்றுக்கும் காமன் பயப்படமாட்டான். அஸஜ் ஜனங்களைமாத்திரம் தன்வசப்படுத்தும்யமனைக்காட்டி லும், ஸஜ்ஜனம், அஸஜ்ஜனம் என்ற வரம்பில்லாமல் எல்லாரையும் தன் வசப்படுத்திக் கொள்கிற காமன், மஹாமூர்க்கன் என்றதைச் சொல்லவும் வேண்டு மோ? உலகத்திலே யமன் என்றால் பயப்படுகிறார்கள். காமன் என்றால் சிரிக்கிறார்கள். ஐயோ கஷ்டம்! காமனைப்போல் மஹாபாபி வேறு ஒருவரும் இல்லை. அதனால் அவன் ரொம்பவும் அசுத்தமானவன். அதனால் தான் சைவஸித்தாந்தத்தில் அசுத்தமான பதார்த்தத்தைச் சொல்லும் "மலம்" என்ற சப்தத்தால் காமனைச் சொல்லப்பட்டிருக் கிறது. இவ்விதம் மலம், மாயா, கர்மா, என்று மூன்று பாசங்க ளுள் மலம், என்ற முதல் பாசமானது காமன்தான் என்றதை அறியவும்.

(தொடரும்)

# ஸம்ஸாரலீலை.

சென்ற மாதத் தொடர்ச்சி.

"லோகமான்யன்" என்ற பெயருடைய ஆனந்தவர்மாவினுடைய அந்தரங்க பந்துவானவன் ஆனந்தவர்மாவை ஸன்மார்க்கத்தில் திருப்ப ஆனந்த வர்மா வஸிக்கும் மாயாபுரிக்குச் சென்றான். உண்மையில் லோகமான்யனுக்கு மாயாபுரியில் யாதொரு விதமான ஸம்பந்தமுமில்லை. ஆகிலும் இந்த ஆனந்தவர்மாவினுடைய செய்கையில் மிகவும் வருத்தத்தை யடைந்த லோகமான்யன் மாயாபுரியில் ஸம்பந்தப்படும்படி நேர்ந்தது. ஒரு குளத்தில் விழுந்து மூழ்குகிறவனைக் கரையேற்றிவிட வேண்டுமென்று நினைத்த கரையிலுள்ள புருஷனும் அந்தக் குளத்தில் தானும் இறங்கித்தானே ஆக வேண்டும். அதுபோல் மாயாபுரியில் அகப்பட்டுக்கொண்ட ஆனந்த வர்மாவைச் சீர்திருத்த எண்ணங்கொண்ட லோகமான்யனும் மாயாபுரியின் ஸம்பந்தத்தை யடைந்தான். இவ்விதம் அடைந்தும் அந்த லோகமான்யனுக்கு ஆனந்தவர்மாவைக் கண்டுபிடித்து அவனுக்கு ஹிதத்தைச்சொல்லும்படியான ஸமயம் நேரவில்லை. பத்ம விலாஸம் என்ற அந்தப்புரத்தில் வித்யாவிநாசினி என்ற தனது ராணியுடன் ராப்பகல் என்ற வேற்றுமையில்லாமல் க்ரீடித்துக் கொண்டிருக்கிற ஆனந்தவர்மாவுக்குத் தன்னுடைய நிமித்தமாக லோகமான்யன் என்ற மஹாநுபாவன் இந்த மாயாபுரியில் வெகு

நாளாக வந்து வஸித்துக்கொண்டிருக்கிறான் என்ற விஷயத்தை எப்படி அறியும் சக்தி ஏற்படும். ஆகிலும் அந்த லோகமான்யன் என்ற மஹாநுபாவன் ஆனந்தவர்மாவைச் சீர்திருத்தாமல் அந்த நகரத்தைவிட்டுப் போவதில்லை என்ற ஸங்கல்பத்துடனிருந்தான்.

இவ்விதமிருக்கும்பொழுது ஆனந்தவர்மா என்ற அரசனும் ஒரு ஸமயத்தில் வழக்கம்போல் தானும் தனது மனைவியும் சேர்ந்து கொண்டு தனது ஆளுகைக்குட்பட்ட சில ஸாமாந்தராஜாக்களுடைய தேசத்தைப் பார்வையிட்டுவரத்தனது அரண்மனையிலிருந்து வெளிக் கிளம்பினான். இந்த மாயாபுரி என்ற ராஜதானிக்குக் கீழ்ப்படிந்த ராஜதானிகள் அநேகங்களாக இருந்தாலும் ஐந்து ராஜதானிகள், மாத்திரம் ரொம்பவும் ப்ரஸித்தமாக ஆகும். அந்த ஐந்து ராஜதானி களில் வரும் கப்பங்களைக்கொண்டுதான் இந்த ஆனந்தவர்மாவும் தனது மனைவியான வித்யாவிநாசினி சொல்படி ராஜ்யகார்யங்களை அநுஷ்டித்துக்கொண்டு வருகிறான். அந்த ஐந்தில், (1) கஜபுரி, (2) பதங்கபுரம், (3) மத்ஸ்யபுரம், (4) ப்ரமரபுரம் (5) ம்ருகபுரம் என்ற பெயர்களால் மிகவும் உலகத்தில் ப்ரஸித்தியடைந்த நகரங் களாகும். அந்த முக்யமான ஐந்து நகரங்களையும் ஆனந்தவர்மா தனது மனைவியுடன் பார்வையிட்டுவர ப்ரயாணமாகக் கிளம்பினான். அந்த ஆனந்தவர்மாவினுடைய ப்ரயாண காலத்திலுள்ள ஸேனா ஸந்நிவேசத்தையும் வாத்ய கோஷங்களுடைய மஹிமையையும் இவ்வளவுதான் என்று சொல்லிமுடியாது. அந்த ஆனந்தவர்மா "தர்ம சக்ரம்" என்ற பெயருள்ள தங்கமயமான ரதத்தில் ஏறிக் கொண்டு வெளியில் ப்ரயாணமாகச் சென்றான். அந்த தர்ம சக்ரம் என்ற ரதத்திற் செய்திருந்த அலங்காரத்தை பாக்யமுள்ள ஜனங்களே பார்த்துக்களிக்கவேண்டும். அந்த ரதத்தில் மூன்று குதிரைகள் ரொம்பவும் உந்நதமான ஆகாரமுள்ளதாகவும் அழகுள்ள தாகவும் கட்டப்பட்டிருந்தன. (தொடரும்)

# சிகையின் அவசியம்.

சென்றமாதத்தொடர்ச்சி.

அதுபோல் நியாயாதிபதியான கடவுளுக்கு நெருங்கிப்பழகி வருகிற சேவகர்களாகவே இந்துக்களைப் பாவிக்கவேண்டும். அந்தச் ஸேவகர்களுக்கு இவன் கடவுளைச் சேர்ந்தவன் என்பதற்கு அடையாளமாக சிகை முக்யமாக ஏற்பட்டது. அதை இவன் அழித்துவிட்டானேயானால், இவனுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கையும் கௌரவ புத்தியுமிருக்கிறது. என்பது எப்படிச் சொல்லமுடியும்? இவனைக் கடவுளைச் சேர்ந்தவன் என்று ஜனங்கள் எப்படி மதிப்பார்கள்? மனது சுத்தமாக இருந்தால் போதாதா? சிகையில் என்ன இருக்கிறது? என்று சில மூடர்கள் ப்ரலாபிக்கிறார்கள், அது சற்றேனும் சரியன்று, மனது சுத்தமாகயிருந்தால் போதும் என்று சொல்லுகிறவர்கள் ஈச்வரனை நம்புகிறார்களா? இல்லையா? ஈச்வரனை நம்பாதபோனால் கடவுளைக்கூட நம்பாத பாபிகளுடைய மனதைச் சுத்தம் என்று எப்படிச் சொல்லமுடியும்? ஈச்வரனை நம்பினாலோ ஈச்வரனுடைய கட்டளையை நம்பி அதுபோல் நடந்தால் தானே ஈச்வரனை நம்பினவனாக ஆவான்.

ஈச்வரனுடைய கட்டளைகளில் சிகை வைத்துக்கொள்ளவேண்டும் என்பதும் ஒரு கட்டளையல்லவா? அந்தக் கட்டளையை நம்பி அந்தப்ரகாரம் நடந்து கொள்ளாதவர்களை ஈச்வர நம்பிக்கையுள்ளவர்கள் என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? சிகை வைத்துக்

கொள்வது என்பது ஈச்வரனுடைய கட்டளையில்லை என்று சொல்ல துணிவார்களா? இன்னது ஈச்வரனுடைய கட்டளை, இன்னது ஈச்வரனுடைய கட்டளையில்லை, என்பதை இவர்கள் கண்டுபிடித்துச் சொல்ல சக்தியுள்ளவர்களா? அது ஒன்றுமில்லை. வீணுகப் ரலாபித்துக்கொண்டு, சிகை ஒன்று தனக்கு ஸ்வாதீனமாக இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு, அதில் தன் ஸ்வாதந்த்ரியத்தைச் செலுத்தி ஈச்வரனையும் சாஸ்த்ரத்தையும் மஹர்ஷிகளையும் உல்லங்கனம் செய்கிறவர்கள் புத்திமான்களாக ஆவார்களா? சிகை வைத்துக்கொள்வது ஈச்வரனுடைய கட்டளையில்லாமலிருந்தால் முன்னோர்களான மஹர்ஷிகளும் தற்காலத்தில் உள்ள ஆஸ்திகர்களும் சிகை வைத்துக்கொண்டிருக்கிறார்களே; அவர்கள் தெரியாதவர்களா? அவர்களுடைய புத்தி சக்தியில் பதினாயிரத்தில் ஒரு அம்சம் தற்காலத்தில் சிகையைத் தினந்தோறும் கத்திரித்து வருகிறவர்களுக்கு உண்டா? வீண்ப்ரலாபித்தால் என்ன? சில அசடுகள் சாஸ்த்ரத்தையும் நம்புகிறேன். சிகையும் அவச்யம்தான், ஆகிலும் அடிக்கடி ஸ்நானம் செய்தால் ஜலதோஷம் பிடிக்கிறது என்றும், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யக் கஷ்டமாயிருக்கிறது. என்றும் மனதிற்குத் தோன்றினபடி ப்ரலாபிக்கிறார்கள்.

அந்த புத்திமான்களுக்குத் தன் உயிரைக்காட்டிலும் தான் அனுபவிக்கும் ஸ்திரீயினிடத்தில் ப்ரேமை அதிகமாக இருக்கிறது என்பதில் ஆக்ஷேபணையேயிராது. அப்படியிருக்கும்பொழுது சிகையினால் எற்படுகிற அசௌகர்யத்தைத் தனக்கு மாத்திரம் இல்லாமல் செய்துகொண்டு, தனது பந்துவான ஸ்திரீயினிடம் ஆரோபணம் செய்வது உசிதமாக ஆகுமா? வீண் வ்யவஹாரத்தால் யாதொரு ப்ரயோஜனமுமில்லை.

(தொடரும்)

# ஜாதி பேதம்.

சென்ற மாதத்தொர்ச்சி,

தவிரவும், ப்ராமணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன், என்ற நான்கு வர்ணங்களுடைய பிரிவுகள் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறதா என்றும் சிலர்கள் சங்கிக்கக்கூடும். அதற்குப் பதிலையும் அடியில் வருமாறு அறியவும். அதாவது ஸ்மிருதிகளாலும் சிஷ்டாசாரத்தாலும் நான்கு வர்ணங்களுடைய பிரிவை ஒப்புக் கொள்ளப்பட்டு வருகிறபடியால், அந்த சிஷ்டாசாரத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் மூல பூதமான சுருதி இல்லாதபோனால் அவைகளுக்கு ப்ரவிருத்தியே எற்பட்ட நியாயமில்லை. அவைகளுடைய ப்ரவிருத்தியைக்கொண்டே மூல பூதமான சுருதி இருக்கிறதென்று தீர்மானிக்கவேண்டும். அவ்விதம் ஜாதியினுடைய வேற்றுமைகளைக் காட்டும் மூல சுருதிகளுக்குள் வேதத்தில் முக்யமான பாகமாகிய புருஷ ஸூக்தத்தில் உள்ள ("ப்ராம்மணோஸ்ய முகமாஸீத் / பாஹூராஜன்ய: க்ருத: / ஊரூததஸ்யயத்வைச்ய: / பத்ப்யாம் சூத்ரோ அஜாயத //") என்ற சுருதி வாக்யமோ, இது போலொத்த இன்னமும் பல வாக்யங்களோ பிறப்பிலேயே ஜாதியின் வேற்றுமை உண்டென்பதில் ப்ரமாணமாகும். அந்த சுருதியின் அர்த்தமோ, பின் வருமாறு அறியவும். அதாவது; ஹிரண்யகர்ப்பன் என்ற ஆதிகர்த்தாவினுடைய முகமே, ப்ராமண ஜாதியினுடைய உத்பத்தி ஸ்தானமென்றும், கார்யத்திற்கும், காரணத்திற்கும் பேதமில்லாத

தினால் ப்ராமண ஜாதியையும் ஆதிகர்த்தாவினுடைய முகத்தையும், ஒரே வேற்றுமையினால் (ஸாமானாதிகரண்யேன) சொல்லப்பட்டிருக்கிறது என்ற உண்மையை முதல் வாக்யத்தால் தெரிந்து கொள்ளவும்; அவ்விதமே க்ஷத்ரிய ஜாதிக்கும் ஆதிகர்த்தாவினுடைய கைகளுக்கும்; வைச்யஜாதிக்கும் ஆதிகர்த்தாவினுடைய தொடைக்கும்; சூத்ர ஜாதிக்கும் ஆதிகர்த்தாவினுடைய பாதங்களுக்கும் கார்யகாரண பாவத்தை முன்னிட்டு அபேதத்தை ஸூசிப்பிக்க ஸமானாதிகரண ப்ரயோகமாகவும், உபாதான காரணம் என்ற அர்த்தத்தை ஸூசிப்பிக்கும் (பத்ப்யாம்) என்ற பஞ்சமியினாலும், அதாவது (ஐந்தாவது வேற்றுமையினாலும்) சொல்லப்பட்டிருக்கின்றன.

இதனால் முகத்திற்கு ஞானம் ப்ரதானமானதினால் ப்ராமண ஜாதிக்கு ஆத்மஞானமும், கைகளுக்குப் பரிபாலனம் ப்ரதானமானதினால் க்ஷத்ரிய ஜாதிக்கு ப்ரஜாபரிபாலனமும், தொடைகளுக்கு கமனாகமனம் அதாவது போக்குவரத்து ப்ரதானமானதினால் வைச்ய ஜாதிகளுக்கு தேசாந்தரத்திற்குப் போய்வருவதை அபேக்ஷிக்கும் வியாபாரம் ப்ரதனமாயும், பாதங்கள், முகம், கைகள், தொடைகள் இந்த மூன்றுக்கும் உதவியைச் செய்யும் ஆதாரமான ஸ்தானமானதினால் அந்தப் பாதங்களிலிருந்து உண்டான சூத்ர ஜாதிகளுக்கு ப்ராமணன், க்ஷத்ரியன், வைச்யன் என்ற மூன்று வர்ணங்களுடைய பரிசர்யையே ப்ரதான தர்மமாகவும், ஸூசிப்பிக்கப்படுகிறது. முகம், கைகள், தொடைகள், பாதங்கள் இந்த நான்கு விதமான ப்ரதானமான அவயவங்களுக்கும் ஒன்றொன்றுக்கும், ஒவ்வொரு கார்யம் முக்யமாக எற்பட்டிருக்கிறது. ஒன்றினுடைய கார்யத்தை மற்றொன்றால் செய்ய முடியவும் முடியாது. பாதங்களாற் செய்யும் கார்யத்தை முகத்தாற் செய்ய முடியுமா? முகத்தாற் செய்யக்கூடிய கார்யத்தைப் பாதங்களாற் செய்ய முடியுமா?

(தொடரும்)

# தீண்டாதார் ஆலயப்ரவேசக் கண்டனம்.

---

1933-ஹு நவம்பர்-மீ 18-உ மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவராள் கோயில் வடக்காடி வீதி வேதாகம சபையில் ஷெ சபையின் ஆதரவின்கீழ், மதுரை அட்வொகேட் ஸ்ரீமான் **K. V** இராமசுவாமி அய்யரவர்கள் அக்ராஸனம் வஹித்து நடத்தப்பட்ட மதுரை ஆஸ்திக மஹாஜனங்களின் சபையில் அக்ராஸனர் சில யுக்திகளைக் கொண்டும், ஷெ சபை பண்டிதரான சாஸ்த்ர ரத்னம் தேதியூர் ப்ரும்மஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளவர்கள் சில அபூர்வ யுக்திகளைக் கொண்டும், ச்ருதி, ஸ்மிருதி வகையறாக்களைக்கொண்டும், ஷெ ப்ரவேசத்தைக் கண்டனம் செய்து, செய்யப்பட்ட தீர்மானங்கள்:--

ச்ருதி, ஸ்மிருதி, ஆகமாசஸ்திரம், முன்னோர்களின் ஆசாரம், யுக்தி இவைகளை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் தீண்டாதார்கள் ஹிந்து ஆலயங்களில் பிரவேசிக்கத்தகுந்தவர்களில்லை என்றும், அவர்கள் ஆலயப்பிரவேசம் செய்வதற்கு சிலர் செய்யும் பிரயத்தனத்தை இக்கூட்டம் பலமாக கண்டிக்கிறதென்றும், அப்படி அவர்கள் பிரவேசம் செய்யும் விஷயத்தில் அதை சட்ட சபைகளின் மூலமாகவோ வேறு சாவதான முறைகளின் மூலமாகவோ தடை செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை சிரத்தையுடன் செய்யவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1934-ஹு காந்தி அவர்கள் தென்னாட்டிற்கு விஜயம் செய்யப்போவதாகத்தெரியவருகிறது. அதுசமயம் தென்னாட்டில் முக்கியமாக சென்னை இராஜதானியிலிருக்கும், வேதத்தையும் ஆகமசாஸ்திரத்தையும் நன்றாக ஆராய்ச்சிசெய்து பண்டிதர்களாக விளங்குகிறவர்களைக்கொண்டு ஒரு ஸம்மேளனம் மதுரைமாநகரில் கூட்டி காந்தி அவர்களுடன் தீண்டாதார்கள் ஆலயப்பிரவேச விஷயமாக சாவதான முறையில் சாஸ்திரங்களையும், யுக்திகளையும் கைக்கொண்டு வாதாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கூடியசீக்கிரம் ஆரம்பித்து நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

முதலாவது தீர்மானத்தை கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்க வேண்டியது என்று தீர்மானிக்கலாயிற்று என்பதையும் ஷெ சபை காரியதரிசி S. ராமனாதய்யர் தெரிவிக்கிறார்.

## விளம்பரம்.

---

மதுரை மேலக்கோபுரத் தெரு, K. சோமசுந்தர மய்யரவர்களை 1933 அக்டோபர் மீ 21 உ முதல் ஸன்மார்க்க ப்ரதர்சினி, விற்பதற்கும் சந்தாதார்கள் சேர்ப்பதற்கும் மதுரை ராமனாதபுரம் ஜில்லாக்களுக்கு ஏஜன்டாக நியமித்திருப்பதால் சந்தாதார்கள் ஷ யாரிடம் சந்தாவை செலுத்தி ரசீதும் புஸ்தகமும் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்:-

ஸன்மார்க்க ப்ரதர்ஸினி ஆபீஸ்,

மதுரை.

தேவை! தேவை!!

எல்ல ஊர்களிலும்

**ஸன்மார்க்கப்ரதர்சினீ.**

விற்பதற்கும், சந்தாதார்கள் சேர்ப்பதற்கும்

# ஏஜெண்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் தரக்கூடும்.

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்;—

மானேஜர்,

'ஸன்மர்க்க ப்ரதர்சினீ ஆபீஸ்"

14, வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

# ஸன்மார்க்க ப்ரதர்சினீ.

## மூன்ருவதுபிரதியில் வெளிவந்த போட்டிப்பந்தயம் (1)ன் முடிவு.

சரியான விடை:—(1) புட்டிகாந்தன், (2) சுருதசோமன், (3) அளகையையாளி, (4) குடக்கோடுவான், (5) குமாரகன், (6) ஸோமாஸ்கந்தர், (7) மதுரிபு, (8) அரியயற்கரியார்.

### முதல் பரிசு பெற்றவர்கள்.

1. வீரலெக்ஷ்மி அம்மாள், 16 மேலாவணிமூலவீதி மதுரை, 2. V. வெங்கடேசுவரன், 16 மேலாவணிமூலவீதி, மதுரை, 3. M. A. முத்துசாமி, 76 மேலாவணிமூலவீதி, மதுரை, 4. K. S மீனுக்ஷிசுந்தர சாஸ்திரிகள் சம்ஸ்கிருத பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், மேலூர், 5. M. S. இராமச்சந்திரன், 27 தெற்குச்சித்திரை வீதி, மதுரை, 6. V. இராமலிங்கம், 39 வடக்குச்சித்ரைவீதி. மதுரை.

### 2-வது பரிசு பெற்றவர்கள்.

1. S. S. சூரியநாராயண சாஸ்திரி, 13 ஸ்ரீனிவாசப்பெருமாள் கோவில் தெரு, எழும்பூர், மதராஸ், 2. K. V. சுந்தரராஜன், IV Form, A, U. C. High School, Madura, 3, R. P. சுந்தரராமன், 21 டவுன்ஹால் ரோடு, மதுரை, 4. தேவுடு அய்யர், பத்திராதிபர், ஆத்மரக்ஷா, தேவாரம்.

குறிப்பு:—முந்தின காப்பிகள் கைவசமில்லாததால் டிஸம்பர்மீ ப்ரதியிலிருந்துதான் கணக்கு வைத்துக்கொள்ளக்கூடும்.

ஆ—ர்.

உ

ஸ்ரீராஜராஜேஸ்வரி துணை.

T. R. கோபாலகிருஷ்ணய்யர் அவர்களால்

ஆயுர்வேத முறையில் செய்யப்பட்ட

# கல்நார் பற்பொடி.

இந்த கல்நார் பற்பொடியானது கல்நாரை அநேக பச்சிலை சாறுகள் விட்டரைத்து பல புடங்களிட்டு அநேக கடை சாமான்கள் சேர்த்து ஆயுர்வேத முறையில் செய்யப்படுவதால் பல்வலி பல்லில் ரத்தம் விழுதல், ஈறு வீக்கம், பல் கூச்சம் முதலிய பல் சம்பந்தமான சகலமான வியாதிகளையும் மூன்றே வேளையில் குணப் படுத்துகிறது.

நாம் வெகு சிரமப்பட்டு கல்நாரை முறையாக பஸ்மம் செய்வதால் மேற்சொன்ன குணங்கள் இயற்கையாகவே அடைந்திருக்கின்றன. ஆதலால் சகோதர சகோதரிகள் யாவரும் மற்ற கல்நார் பற்பொடிகள் மாதிரி அசிரத்தையாக எண்ணாமல் உண்மையாயும் நம்பிக்கையாயும் செய்யப்படுவதாதலால் யாவரும் வாங்கி உபயோகிக்குமாறு கோருகிறேன்.

ஒருமுறை உபயோகித்தால் இதன் உண்மை விளங்கும். மேற்சொன்னபடி கல்நாரை பஸ்மம் செய்வதை நண்பர்கள் நம் தொழிற்சாலையில் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம்.

**15** நாட்கள் உபயோகிக்கக்கூடிய பாக்கெட் **1**-க்கு **0—0—6**

டஜன் **1**-க்கு **0—5—0**

வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் தேவை தகுந்த சௌகரியம் செய்து கொடுக்கப்படும்.

**T. R. கோபாலகிருஷ்ணய்யர்,**

உயர்ந்த கல்நார் பற்பொடி தயார் செய்பவர்

**இராமநுஜபுரம்.**

கருப்பட்டி போஸ்டு, மதுரை ஜில்லா.

ஷை பல்பொடி வெங்கடேஸ்வர் பிரஸில் கிடைக்கும்.

காக்காத் தோப்புத்தெரு, மதுரை.

Reg No. M. 2970.

# 'ஸன்மார்க்கப்ரதர்சினீ'

## மதுரை.

(ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் வெளிவரும்.)

### சந்தா விகிதம்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ | 1—0—0 |
| 6 மாத சந்தா | ரூ | 0--12—0 |
| தனிப் பிரதி | ரூ | 0—2—0 |
| வெளியூர்களுக்கு வருஷசந்தா | ரூ | 1—6—0 |

சந்தாதார்களுக்கு சேர்ந்த வருஷத் துவக்கத்திலிருந்து தான் சஞ்சிகை அனுப்பப்படும்.

1. சந்தாத் தொகையை முன் பணமாகவே மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.
2. விலாஸ மாறுதல்களுக்கு, சந்தா எண்ணைக்குறித்து புதிய விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. கடிதப் போக்குவரத்துக்களுக்கு, பதில் வேண்டுவோர், தபால் சிலவு அனுப்ப வேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ராப்பர் முழுப்பக்கம் | ரூ | 5—0—0 |
| தடவை 1-க்கு முழுப் பக்கத்திற்கு | ரூ | 3—0—0 |
| ,, அரை பக்கத்திற்கு | ரூ | 2—0—0 |
| ,, கால் பக்கத்திற்கு | ரூ | 1—0—0 |

மானேஜர்,

"ஸன்மார்க ப்ரதர்சினீ" ஆபீஸ்,
14, வடக்குச்சித்திரை வீதி,
மதுரை.

குறிப்பு:—1. மற்ற விபரங்களுக்கு கடிதம் எழுதவும்.
2. சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத விளம்பரங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

Printed at the Venkateswar Press, Kakatope st, Madura